பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 24 வியாழக்கிழமை (07.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 73

# வடக்கையும் கிழக்கையும் பிரித்து தீர்வு கொண்டுவருவது அநியாயம்

## சு.க. - ஐ.தே.க. சேர்ந்து பொருத்தமான திட்டத்தை முன்வைக்கக் கோருகிறார் சம்பந்தன்

கொழும்பு,பெப்ரவரி 07



வடக்கு - கிழக்கைப் பிரித்து, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அநியாயம். அது சாத்தியமற்றது; பயனற்றது. 13ஆவது சட்டத்திருத்தம் வடக்கு - கிழக்கு இணைப்பையே வலியுறுத்துகிறது.

அரசு தற்போது முன்வைத்திருக்கும் தீர்வு முயற்சி மூலம், தன்னைத் தானேயும் அத்துடன் மக்களையும் ஏமாற்றிக் கொள்கிறது - என்று இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் சாடினார்.

சிங்கள மக்கள் தமிழருக்கு நீதியான தீர்வை வழங்கத் தயாராக வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீல.சு.கட்சியும் ஒன்றிணைந்து முரண்பாடு இல்லாத தீர்வை முன்வைத்தால் அதுவே பொருத்தமானதாக இருக்கும். வெற்றியும் அளிக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் எல்லாச் சட்டத்தையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு,பெப்.07

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றில் 84 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. பிரேரணைக்கு ஆதரவாக 103 வாக்குகளும், எதிராக 19 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

பிரேரணைக்கு ஆதரவாக அரசுத் தரப்பினர் மற்றும் ஜே.வி.பியினரும் எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் ஆகியோரும் வாக்களித்தனர்.

மலையக மக்கள் முன்னணி மற்றும் இ.தொ.கா.ஆகிய கட்சிகளைச் சேர்ந்தோர் வாக்கெடுப்பு நேரம் சபையில் இருக்கவில்லை. ஐ.தே.கவினர் வாக்கெடுப்பு நேரம் சபையில் இருந்தபோதிலும் அதில் கலந்துகொள்ளவில்லை. (உ-07)

## கிரிக்கெட் போட்டிகளை இடைநிறுத்த முடிவு

சகல பாடசாலைகளிலும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளை இடைநிறுத்துமாறு கல்வியமைச்சின் செயலாளர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் கொழும்பில் நேற்று கூடி தற்போதைய நிலைமை குறித்துவிரிவாக ஆராய்ந்தது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கிரிக்கெட் போட்டிகளை இடைநிறுத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பாக கல்வியமைச்சு செயலாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

## மட்டு. தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின் பின் 12 வேட்பாளர்கள் உட்பட 28 பேர் கடத்தப்பட்டனர்!

### ஐ.தே.கட்சியின் எம்.பி. நேற்று சபையில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, பெப். 07

மட்டக்களப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இப்போதுவரை அங்கு 28 பேர் கடத்தப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுள் 12 பேர் வேட்பாளர்கள் என்றும் ஐ.தே.கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் செனவிரட்ன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற - அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான - விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னாரில் நேற்றுப் பூரண ஹர்த்தால்

கொழும்பு, பெப். 07

கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் வன்னியிலும் இடம்பெற்று வரும் பொதுமக்கள்மீதான குண்டுத்தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

'புளொட்' அமைப்பின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்த ஹர்த்தால் நடவடிக்கையால் இந்த மாவட்டங்களிலுள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் போக்குவரத்துக்கள் ஆகியன முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அந்த மாவட்டங்களிலுள்ள பிரதான வீதிகளில் பெருமளவிலான இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.(சி)

## நாகர்கோவில் - கிளாலியில் மோதல் இருதரப்பினரும் முரண்பட்ட தகவல்

யாழ்ப்பாணம் நாகர்கோவில் மற்றும் கிளாலிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளில் தாக்குதல் நடத்த முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் இரு படைச்சிப்பாய்கள் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனப் புலிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் 45 நிமிடங்கள் வரை நீடித்தது என்றும், தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் தமது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்றும் விமானங்கள் குண்டுமாரி!

### எட்டுத் தடவைகள் கொட்டித் தீர்த்தன

கிளிநொச்சி,பெப்.07

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி நகரத்தின் தென்கிழக்குப் பகுதியில் விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று முற்பகல் நடத்திய தாக்குதலில் பாடசாலைச் சிறுமி உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி நகரை வட்டமிட்ட விமானங்கள் எட்டுத் தடவைகள் அப்பகுதியில் குண்டுகளைக் கொட்டித்தீர்த்தன.

இத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை, கிளிநொச்சி திருவையாறு பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் தளம் ஒன்றை இலக்குவைத்தே இத்தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது எனப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## இலங்கைக்கு ஆயுத உதவி வழங்காதீர்; புதுடில்லியில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

### இந்திய நாடாளுமன்றத்தின் முன் நடத்தினர்




புதுடில்லி, பெப்.07

இலங்கைக்கு, இந்தியா ஆயுத உதவிகள் வழங்குவதைக் கண்டித்து தமிழ் நாட்டின் பெரியார் திராவிடர் கழகத்தினர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் புதுடில்லியில் இந்திய நாடாளுமன்றத்தின் முன்பாக பேரெழுச்சி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

பேராசிரியர்

## கலாநிதி ப. புஷ்பரட்ணம்



எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவரும் வரலாற்றியல் ஆய்வாளருமாகிய

*கலாநிதி ப.புஷ்பரட்ணம்* அவர்கள்

**பேராசிரியராக**

நியமனம்பெற்றமையையிட்டு எமது நல்வாழ்த்துக்களை நவில்வதில் பெருமிதமடைகிறோம்

**பழைய மாணவர் சங்கம்**
**ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்**

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2006 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ். பிரதான வீதி - 104 | 2008.03.29<br>2008.03.30<br>2008.04.05<br>2008.04.06<br>2008.04.07<br>&<br>2008.04.08 | மக்கள் வங்கி யாழ்/கன்னாதிட்டி - 284 |
| 02 | சேவை நிலையம், உரும்பிராய் | | |
| 03 | சாவகச்சேரி - 110 | | |
| 04 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 05 | யாழ். பல்கலைக்கழகம் - 162 | | |
| 06 | சேவை நிலையம், திருநெல்வேலி | | |
| 07 | யாழ்.கன்னாதிட்டி - 284 | | |
| 08 | சேவை நிலையம், இணுவில் | | |
| 09 | யாழ். ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 10 | சேவை நிலையம், மானிப்பாய் | | |
| 11 | காங்கேசன்துறை - 031 | | |
| 12 | சேவை நிலையம், மல்லாகம் | | |
| 13 | அச்சுவேலி - 107 | | |
| 14 | சங்கானை - 108 | | |
| 15 | சுன்னாகம் - 109 | | |
| 16 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 17 | நெல்லியடி - 106 | | |
| 18 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்
வடவலயம்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(#/5513983)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 - 02 - 1952 | 08 - 01 - 2008 |



### அமரர் தம்பிப்பிள்ளை ஆறுமுகம்

புதுமலராய் பூத்து மண்ணில்
புன்னகைத்த எங்கள் அப்பாவே
இருயுகம் போல் இருக்குதப்பா
இருந்த இடம் தவிக்குதப்பா
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம்
எங்கள் அப்பா
ஆலமரமாய் இருந்துவிட்டு
அவசரமாய் சென்றதென்ன
இப்புவியில் நாம் இருக்கும் வரை
இதயத்தில் ஏற்றி உம்மை
இறைஞ்சிடுவோம் நாங்கள் அப்பா!

இன்று (07.02.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பா.சோபனா (மகள்)
*இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலி.*

## மாதகல் லூர்த்து கெபியில் நவநாள் திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.7

மாதகல் கடற்கரை வீதியில் அமைந்துள்ள லூர்துகெபியில் எதிர்வரும் 17 ஆம் திகதி திருவிழா இடம்பெறவுள்ளது.

திருவிழாத் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறும்.

நவநாள்களில் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் திருவிழாத் திருப்பலிக்கு காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் வழிபாட்டிற்கு மக்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வாகனங்கள் எதுவும் கடற்கரைக்கு செல்ல முடியாது என்றும் கைப்பைகள், கமராக்கள், கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவையும் கொண்டு செல்ல முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு வருகை தருபவர்களை அடையாள அட்டையுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இளைப்பாற்று மண்டபம்

சாவகச்சேரி மாவட்ட ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவிற்கு வரும் நோயாளர் நலன் கருதி 50 அடி நீள இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது. மண்டபம் அமைப்பதற்கான நிதியினை தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் லண்டன் கிளையினர் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1971இல் பிறந்த, பூரட்டாதி 4ஆம் பாதம், கனடா P.R. கிரகபாவம் 30 உள்ள மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு: 333A, கிருபா நகைமாளிகை
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(70870)

## MATHAN ELECTRONICS

சகலவிதமான T.V களும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

★ KV 2183, KV 2184, KV2185, G21 போன்ற T.V கள் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

**MATHAN ELECTRONICS**
Suthumalai Junction,
Manipay.

## மரண அறிவித்தல்

### றோமான் மனவல்



குருநகர், இல.3 அடப்பன் வீதியில் வசித்த றோமான் மனவல் நேற்று (06.02. 2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோமான் - எலிசம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற றோசம்மாமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூமணி,தங்கமணி, குலம், துரைவீரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சீனத்தான், துரைச்சாமி ,தவம், பொன்னுக்கண்டு ஆகியோரின் மைத்துனரும் சரசு, அற்புதம், விஜிதா(சுவிஸ்), வனிதா, சுகிர்தா, ரமேஸ் (சுவிஸ்), சுரேஸ், றஜிதா (லண்டன்)ஆகியோரின் தந்தையும் அன்ரன், யம்பிள் (கிளபோடாசியஸ்), ராஜா (சுவிஸ்), அமலன், எஸ்பீரியல் (அமெரிக்கா), சுஜி(சுவிஸ்), ஜமிலா, பெரில் (லண்டன்) ஆகியோரின் மாமனும் டொறின், மரிய தாஸ்யூட், டெலினா, டள்கினி, றவி (லண்டன்), டெல்சியா, துவாரகா, டாளிங்கன்,டெலிங்சன், செலிங்ரன், மரிங்ரன், லிவிங்ரன், வலங்ரன், ஷாம்(சுவிஸ்), ஷாரா(சுவிஸ்), சுரேஜா, தனுஜா, டில்ஷான் (லண்டன்), டிலக்சி (லண்டன்), டிலறன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் டிலக்ஷன், டார்வின்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.02. 2008) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல.3 அடப்பன் வீதி, குருநகரிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.கிளபோடாசியஸ்
(யம்பிள்-மருமகன்)
இல.3 அடப்பன் வீதி, குருநகர்.

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### அறிவித்தல்

#### பட்டச் சான்றிதழ் வழங்கல் வணிகமாணி, கலைமாணி மற்றும் நுண்கலைமாணி

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் நாளை(08.02.2008) வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா 500.00 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பதிவாளர்
06.02.2008

(#/5513982)

## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம் மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 09.02.2008 சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

*சுன்னாகம்,மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை.*

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வடிவேலு தங்கரத்தினம்

249A, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு தங்கரத்தினம் 05.02.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வடிவேலுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான முருகேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் விக்னேஸ்வரன், மகேஸ்வரன், விக்னேஸ்வரி, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற குணதீஸ்வரன் மற்றும் விமலேஸ்வரன் (நிமால்) ஆகியோரின் அன்புத் தாயாரும், முகுந்தா, பிறேமராணி, யோகரத்தினம், ஜெயந்தி, மீனா ஆகியோரின் அன்பு மாமியாரும், கர்ஷனா, அஷோக், ஜெயகர்ஷினி, ரிஷிகேஷன், உமேஷ், டிலானி, கபிலன், சுகன்யா, ஜெயதர்ஷன், கீர்த்தனா, அர்ச்சனா, டினுஷ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெயரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் மங்கையர்க்கரசி, குணரட்ணம், காலஞ்சென்ற சண்முகரட்ணம் மற்றும் பஞ்சரட்ணம் ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி, விமலாதேவி, நவரட்ணராஜா, சத்தியகுமாரி, தவமணிதேவி, இந்திரமலர், பாலசிங்கம், நாகேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.02.2008) வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு இறுதிக் கிரியைகளின்பின் கல்கிசை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*NO. 62 D, Kawdana Road,*
*Dehiwala. T.P: 0777427740.*

### அழகரத்தினம் கனகசபை



(ஆசிரியர், யா/சந்திரமௌலீசா ம.வி)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட அழகரத்தினம் கனகசபை 04.02.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரத்தினம் -வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் பொன்னுத்துரை - புவனேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும் சுதாகரன், சுவர்ணா(சுவிஸ்), பிரசாந் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் சிவரூபனின் மாமனாரும் காலஞ்சென்ற கந்தசாமி, தர்மராசா, பத்மநாதன் (ஆசிரியர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி.), பற்குணநாதன்(நகரசபை, சாவ கச்சேரி), தவராசா, ரவிச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோ தரனும் தேவபாதம் (மருத்துவபீடம்), திருநாவுக்கரசு (கனடா), சிவலோகநாதன் (கனடா), ஆனந்தராசா (கனடா), காலஞ்சென்ற யோகராணி, சுகிர்தராணி (கனடா), யமுனாராணி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2008) வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பி.ப. 2 மணிக்கு பூதவுடல் கல்கிசை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் (சுதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாரம்பரிய பண்பாடுகளையும் கலாசாரத்தையும் இன்றைய காலத்தில் பாதுகாக்கவேண்டியது கடமை

## இதற்கு இளைஞர்கள் கலையைப் பயிலவேண்டும்



இணுவில்,பெப்.7

எமது பாரம்பரிய பண்பாடுகளையும் கலாசாரத்தையும் இன்றைய காலத்தில் பாதுகாக்க வேண்டியது எம் முக்கிய கடமையாகவுள்ளது.

இளைஞர்கள் பல்வேறுவிதமான கலாசாரச் சீரழிவுகளுக்கும் பிறழ்வான நடத்தைகளிலும் அதிகமாக ஈடுபடுகின்றார்கள். இவர்களை எவ்வாறு நல்வழிப்படுத்தலாம் எனப் பலர் வேதனைப்படுகின்றார்கள்.

இந்த நிலையை மாற்ற இளைஞர்களுக்குக் கலைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் தம்மை இயைபாக்கிக் கொள்வார்கள்.

இந்தவகையில் இணுவையூர் குமரநர்த்தனாலயம் பெரும் பங்காற்றி வருகின்றது. மேற்படி நர்த்தனாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தனது உரையில் தெரிவித்ததாவது-

ஒத்திசைவு, சமநிலை, ஆளுமை, சீர்மை, தனித்துவ மலர்ச்சி என்பன கலையாக்கத்தின் அழகுணர்வுகளாகும். கலை, ஞானம் அறிவையும் அனுபவத்தையும் ஒன்றிணைக்கின்றது. அறிவின்மையை அழித்தல், மாயையைக் கண்டறிதல், சுய ஒளியைப் பெறுதல் போன்றவற்றுக்குக் கலைகள் வழிகாட்டுகின்றன. இவற்றுள் ஆடற்கலையான பரதக்கலை மிக உன்னதமானது.

இவ்வகையில் இன்றைய இளைஞர்கள் இயைபாக்கமடையவைக்க பரத நாட்டியம் மற்றும் சங்கீதம், சித்திரம், நாடகம் ஆகிய கலைகளைக் கற்பிக்க வேண்டும்.

இக்கலைகளின் ஊடாகவே பக்தி இயக்கம் வளர்ச்சியுற்றது. ஆடலும் பாடலும் இயக்கத்தின் செயற்கூறுகளாகும். மேலும் இளைஞர்களிடையே ஆக்க மலர்ச்சியையும் கலைகளால் ஏற்படுத்த முடியும். மனிதருக்கும் மனிதருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கும் அழகியற் கலைகள் பயன்படுகின்றன.

மனித ஒருங்கிணைப்பு வீழ்ச்சியடைதல், ஒழுக்கம் நிலைகுலைதல், நேர்மை தவறுதல், அறம் வீழ்தல் முதலானவற்றில் கலைகள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

எனவே மனிதத்துவ வளர்ச்சிக்கும் கலைகள் பெரும் பங்காற்றுகின்றன - என்றார். (203)

## கசிப்பு வழக்கு ஒன்றில் நீதிமன்றத்திற்கு 'டிமிக்கி' விட்ட நபருக்கு 6 மாத கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,பெப்.7

கசிப்பு வழக்கு ஒன்றில் ஒரு வருட காலமாக நீதிமன்றத்துக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த நபர் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றம் 6 மாத கடூழியச் சிறையும் 80 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

குப்பிளானைச் சேர்ந்த ஒருவருக்கு கசிப்பு வழக்குத் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இருந்தபோதிலும் இவர் ஒருவருட காலமாக நீதிமன்றத்திற்கு பிரசன்னமாகாமல் வந்துள்ளார். சுன்னாகம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட அவர் மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போதே இவருக்கு 6 மாத கடூழியச் சிறையும் 80 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (203)

## வலி.தெற்கில் பாற்சாலை திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

வலி.தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் கொள்வனவு விற்பனை நிலையம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் உள்ள கட்டடத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ம.அமிர்தலிங்கம் இதனைத் திறந்துவைக்கவுள்ளார். (203)

## ஓய்வூதியருக்கு கொடுப்பனவுகள்

குருநகர்,பெப்.7

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேச அரச ஓய்வூதியர்களுக்கான பெப்ரவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை வங்கிகளில் வழங்கப்படவுள்ளது.


2008 ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களுக்கான அதிகரிப்பு வாழ்க்கைச் செலவுப்படியும் இக்கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப்படும் என தெரிவிக்கப் பட்டது. (203-51)

## இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த வருடம் தற்காலிக இணைப்புப் பெற்ற வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான ஜனவரி மாத வேதனம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வருடம் (2008) இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான வேதனம் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (1-207)



பருத்தித்துறை சென்.அன்ரனீஸ் தேவாலயத்தில் நடைபெற்ற கணனி அறிவுசார் கல்வியகத்தின் இரண்டாவது தொகுதி மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உளவியல் ஆலோசகர் வணபிதா எஸ்.டேமியன் அடிகளார் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணி ஆகியோர் மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவதைப் படங்களில் காணலாம். *(படங்கள் : குருநகர் செய்தியாளர்)*

# தம் மீதான யுத்த அழுத்தங்களைச் சமாளிக்கவே புலிகள் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்

## அவர்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார் வீரவன்ஸ

கொழும்பு,பெப்.6

புலிகள் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் யுத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கும், இலங்கையின் எதிரி நாடுகளின் ஆதரவைத் தம்பக்கம் வளைத்துப் போடுவதற்குமாகவே அப்பாவிப் பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்துகின்றனர் என்று ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

இத்தருணத்தில் புலிகள் மீதான யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்துவதைத் தவிரவேறு வழியில்லை என்றும் -

அரசு, அரசியல் தீர்வில் காலத்தை வீணடிக்காது யுத்தத்தின் பக்கம் கூடிய கவனத்தைச் செலுத்தி புலிகளை முழுமையாகத் தோற்கடிக்க வேண்டும் என்றும் - அக்கட்சி மேலும் கூறியது.

இதுதொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று விசேட அறிக்கையொன்றை நாடாளுமன்றில் வெளியிட்டு உரையாற்றினார். இது தொடர்பாக அவர் அங்கு கூறியவை வருமாறு:-

புலிகள் இப்போது அப்பாவிப் பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தி அவர்களைக் கொலைசெய்து வருகின்றனர்.

புலிகள் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் நடத்திய குண்டுத்தாக்குதலில் 8 பேர் காயமடைந்தனர். புறக்கோட்டை ரயில் நிலையத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தி மக்களைக் கொலை செய்தனர்.

பொதுவாக முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்வதற்கே புலிகள் தற்கொலைக் குண்டுதாரிகளைப் பயன்படுத்துவர்

### வங்குரோத்து நிலையில் புலிகள்

ஆனால், இப்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அப்பாவிப் பொது மக்கள் மீதும் அவர்கள் நடத்துகின்றனர். புலிகள் அடைந்திருக்கும் வங்குரோத்து நிலையையே இது காட்டுகின்றது.

அது மாத்திரமன்றி, வெலிஓயாவிலும் திங்கட்கிழமை பயணிகள் பஸ்மீது குண்டுத் தாக்குதல் நடத்தி மக்களைக் கொலை செய்திருக்கின்றனர்.

சனிக்கிழமை தம்புள்ளையில் பயணிகள் பஸ் மீது தாக்குதல் நடத்தி 20 பொதுமக்களைக் கொலை செய்தனர். சமய வழிபாடுகளில் கலந்துவிட்டுத் திரும்பிய வயதான பெண்களே இத்தாக்குதலில் அதிகமாகக் கொல்லப்பட்டனர்.

புலிகளின் இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல்கள் இடம்பெற்றமைக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசு விலகியமை காரணமல்ல. அவர்கள் இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்திலும் இவ்வாறான தாக்குதலில் ஈடுபட்டே வந்தனர்.

புலிகள் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் யுத்த அழுத்தத்தைக் குறைத்துக் கொள்வதற்காகவும் இலங்கைமீது பகைகொண்டிருக்கும் நாடுகளின் ஆதரவைத் தாங்கள் பெருக்குவதற்காகவுமே புலிகள் இவ்வாறான தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்துகின்றனர்.

இச்சந்தர்ப்பதில் புலிகள் மீதான தாக்குதலைத் தீவிரப் படுத்துவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை. மனித உரிமைகள் பற்றி பேசுகிறவர்களை கொஞ்சம் கிடப்பில் வைத்துவிட்டு இருந்த யுத்தத்தை அரசு தீவிரப்படுத்தவேண்டும் - என்றார் அவர். (சி)

## பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.7

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையிலும் பிற்பகல் ஒரு மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இப்பரப்புரைக் கூட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடக்கு - கிழக்கு இணைப்பாளரும் யாழ்.மாவட்டக் கிளையின் உப தலைவருமான கு.பாலகிருஷ்ணன், யாழ். கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர் எஸ்.கே. துரைரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டு பரப்புரை நிகழ்த்துவர். (203)

## சேவைமூப்பு பட்டியலை அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.7

உள்ளூராட்சித் திணைக்கள அலுவலகங்கள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் அனைத்து தொகுதி உத்தியோத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் சேவை மூப்பு பட்டியலை உடன் அனுப்பிவைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எவ்.ஜோன்சன் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளார். (203-207)


## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.7

அராலி வானவில் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அராலி துணவி சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

* இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி எதிர் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழக 'ஏ' அணி.
* தெல்லிப்பழை யுத்யூனியன் விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் அராலி திருமகள் விளையாட்டுக்கழக 'பி' அணி.

(203-86)




சுழிபுரம்,பெப்.7

பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய இலட்சார்ச்சனை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை அபிஷேகம், பூசைகள் என்பன இடம்பெறும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று மாசி மகம் அன்று சுழிபுரம் திருவடி நிலையில் தீர்த்தம் இடம் பெறும். (203-28)

* * *

பாண்டியன்தாழ்வு நரசிம்ம ஞானவைரவர் ஆலய ஆலங்காரத் திருவிழா கடந்த மாதம் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகிறது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விசேட பூசை இடம்பெற்று தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று வைரவப் பெருமான் வீதியுலா வருவார்.

11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிராயச்சித்த அபிஷேகம், விசேட பூசை, பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். தொடர்ந்து அன்னதானம் இடம் பெறும். (203)

* * *

சுன்னாகம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணி தொடக்கம் பூசை அபிஷேகங்கள் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.

தொடர்ந்து சனீஸ்வர பகவான் நவகலச அபிஷேகம், உபசாரபூசை, சீதாராம கல்யாண வைபோகம், மங்கல உலா என்பன இடம்பெறும். தொடர்ந்து அன்னதானம் நடைபெறும். (203)

* * *

நவாலி வடக்கு பெத்தனாச்சி - நாச்சிமார் ஆலய கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை கர்மாகர்ம கிரியை இடம்பெற்று மாலை 3 மணி முதல் 4 மணி வரை எண்ணைக்காப்புக் சாத்துதல் இடம் பெறும். (203-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் நன்நாள் வாழ்த்துகள்



07.02.2008 (8ஆவது அகவை)

எமது கல்லூரி இயக்குநர் சண்முகநாதன், விரிவுரையாளர் அருள்நங்கை ஆகியோரின் அருமை மகன் **ச.சந்துதன்** அவர்கள் பல் கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பெருமையுடன் வாழ மனம் நிறைந்த எமது பிறந்த நாள் வாழ்த்துகள்

மாணவர்கள்,
**புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்.**

## O⁺ வகை சிறுநீரகம் தேவை

சிறுநீரக மாற்றுச்சிகிச்சை செய்யவிருக்கும் ஒருவருக்கு O⁺ வகை சிறுநீரகம் தேவை. வழங்கவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

58/3, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை.
T.P 222 5290
Col. 0112 502330

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

957 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம்

**08 18 49 51**

**05-02-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4598037 - 4611334

ஜக்பொட் பரிசு ரூபா.5,992,300/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 278,989 | 10/- | 2,789,890/- |
| 2 இலக்கங்கள் | 25,679 | 20/- | 513,580/- |
| 1 இல. + லக்கினம் | 25,385 | 30/- | 761,550/- |
| 2 இல. + லக்கினம் | 2,276 | 100/- | 227,600/- |
| 3 இலக்கங்கள் | 684 | 500/- | 342,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 5,000/- | 290,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 5,992,300/- | 5,992,300/- |
| மொத்தம் | | | 11,216,920/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 333,080 | | 12,240,420/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5493149 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 பெப்ரவரி 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 4598663-3-15 |
| மாத்தறை | 4598905-1-02 |
| கம்பஹா | 4607206-4-87 |
| பொலன்னறுவை | 4603442-9-32 |
| மொனராகலை | 4605582-5-34 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சரவணமுத்து (ஆச்சாரி)



வசாவிளான் வன்னியர் கோயிலடியை பிறப்பிடமாகவும், காளிகோயிலடி தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சரவணமுத்து அவர்கள் நேற்று (06.02.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தெய்வானைப்பிள்ளையின் (சின்னத்தங்கச்சி) அன்புக் கணவரும் தற்பராசக்தி, கருணேஸ்வரி, சிறிதரன், சிவசக்தி, சிறீவரதன், லலிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகம்மா, தம்பிஐயா (செல்லையா), ஆச்சிமுத்து, தங்கம்மா, அன்னபூரணம், சிங்கராசா மற்றும் நாகமணி (வவுனியா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, இராசரத்தினம், மல்லிகாரதி, கனகராசா, சித்திரா, சசிகரன், சறோஜினிதேவி ஆகியோரின் மாமனும் கடம்பநேசன், சிவநேசன், குகநேசன், அருள்நேசன், இராஜேஸ்வரி, மயூரினி, துர்க்காதேவி, யாழினி, யதுஷன், சதுர்ஷன், சங்கவி, பவித்திரன், பானுஜா, வினோதினி, தில்ஷானி, நிரோஜினி, டில்சானி, திவாகரன், ரூபினி, இளமுருகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.02.2008 வியாழக்கிழமை பி.ப 1 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நி.மு : வன்னியர் கோயிலடி,*
*வசாவிளான்.*
*த.மு: காளி கோயிலடி,தாவடி.*

தகவல்
**குடும்பத்தினர்.**

## வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி,பெப்.7

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த சொற்பொழிவு நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பெரிய புராணம் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(203-160)

## இலவச ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இலவச ஆங்கில வகுப்பு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கென்றிடுனால்ட் மண்டபத்தில் மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

வகுப்பில் கலந்துகொள்ள விண்ணப்பித்தவர்களை குறித்த நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

(203)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

* ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
* சிற்றி பாம் ரேடேர்ஸ் - கல்வியங்காடு

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் ஆழ்வார் நாகராசா

பிறப்பு 03-03-1945 இறப்பு 07-02-2007

"என் ஆன்மா ஆண்டவரின் திருவசனத்தின் மேல் ஊன்றிக் காத்திருக்கின்றது
என் ஆன்மா ஆண்டவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றது"
எம் நினைவுகளின் மூச்செல்லாம் நீங்கள் தான் அப்பா!
மரணம் உங்களை மட்டுமே எடுத்துச் சென்றது -
உங்கள் ஞாபகங்களை அல்ல அப்பா நீங்கள் எப்போதும் எம்முடனே.

இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இன்று (07.02.2008) வியாழன் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்து இவருக்காக மன்றாடவும் இன்றைய தினம் நடக்கவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மல்வம், உடுவில்*
*சுன்னாகம்.*

## திருத்தி வாசிக்கவும்

உதயன் பத்திரிகை 05.02.2008 ஆம் திகதிய இதழில் 2ஆம் பக்கம் பிரசுரமாகியிருந்த திருமதி ஏரம்பு சின்னம்மாவின் (சின்னன்) மரணஅறிவித்தலில் இரண்டாம் பந்தியில் அவரது பிள்ளைகள் பற்றிய குறிப்பில் இரண்டு பெயர்கள் தவறவிடப்பட்டுள்ளன. அதனை இராசாத்தினம் (சுவிஸ்) நேசரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் [illegible] கவும்.

## மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி

### விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், தென்மராட்சி, சாவகச்சேரி, மீசாலை கரும்புமாவடி பதியுறையும் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும். 11.02.2008, தைமாதம் 28ஆம் நாள் திங்கட் கிழமை காலை 9.38 மணிமுதல் 10.08 மணி வரை வரும் மீனலக்ன சுபமுகூர்த்தத்தில் நூதன புனராவர்த்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

அனைத்து அடியவர்களும் கும்பாபிஷேகத்தைத் தரிசித்து இஷ்ட சித்திகளும் சர்வமங்களங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக

**எண்ணெய்க் காப்பு சாத்துதல் 10.02.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் பி.பகல் 2மணிவரை நடைபெறும்.**

பிரதிஷ்டா பிரதம குரு கிரியாவித்தகர், சிவாகம கிரியாஜோதி
சிவாகமதிவாகரன், வேதவித்யா பூஷணம்,
**பிரம்மஸ்ரீ பால முரளிதரக் குருக்கள்**
(மீசாலை இலந்தைக் கூடல் வீரகத்திப் பிள்ளையார் திருக்கோயில்)

முகாமையாளர் : **க.செ.விக்னராசா.**

(70871)

## பால் விநியோகம்

*சாவகச்சேரி, சங்கானை, கோப்பாய், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், உடுவில், அச்சுவேலி ஆகிய இடங்களிலிருந்து பாலினை திருநெல்வேலிக்கும் பாற்பொருள்களை சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் கொண்டு செல்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளை உறுப்பினர் தொண்டர்கள் சேவை அவசியமாகிறது. மாதக் கொடுப்பனவு, மேலதிக வருமான வசதி, போக்கு வரத்து வசதி உண்டு. இதில் இணைவதற்கு விரும்புபவர்கள் தமது விண்ணப்பத்தினை, தமது இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரிவின் தலைவர்/ செயலாளர் சிபார்சுடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு உடனடியாக அனுப்பவும். இவர்கள் எமது சங்கக் காரியாலயத்துக்கு 11.02.2008 மு.ப 10 மணிக்கு வருகை தரவும்.*

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ்கிளை,**
*73, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.*

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் ஊழியராகக் கடமையாற்றிய பிரான்சிஸ் கிறிஸ்டன் உதயகுமார் (உதயன்) என்பவர் 31.01.2008 இல் இருந்து விலகிவிட்டார் என்பதனை அறியத் தருகின்றோம். மேற்குறிக்கப்பட்ட திகதிக்குப் பின் எமக்கும் (Hotel Rolex) அவருக்கும் எவ்வகையிலும் தொடர்புகள் இல்லை என அறியத் தருகின்றோம்.

**ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்**

**540, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(70880)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கார்த்திகேயன்-கார்த்திகேயன் சரோஜினி



யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினையை சேர்ந்த சின்னத்துரை கார்த்திகேயன் அவரது மனைவி கா.சரோஜினி ஆகியோர் கனடா மொன்றியலில் அகால மரணமடைந்து விட்டார்கள். இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
**சி.சிவகுமார்** *(சம்பந்தி)*
(சிவகணேசன் ரெக்ஸ் றைல்ஸ்.
யாழ்ப்பாணம்)

*கலைவாணி மில் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.*

(70863)

### தம்பிப்பிள்ளை மாணிக்கவாசகர்

(முன்னாள் கிறீன்லண்ட் வங்கி முகாமையாளர்)

காரைநகர்-புதுறோட்டை பிறப்பிடமாகவும், பம்பலப்பிட்டி-மேரிஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மாணிக்கவாசகர் 03.02. 2008 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், சிவபாக்கியத்தின் கணவரும், சிவநந்தினி (கனடா), சிவமோகன் (கனடா) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.02.2008) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கொழும்பில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருளானந்தம் சாந்தகுமார்

*வேதரடைப்பு, காரைநகர்..*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை நூல்களைத் தயாரித்து வழங்கி மாணவர் கல்வியை இலகுவாக்கும் அரியாலை மகேஸ்வரி வித்தியாலயம்


அதிபர் பாலசிங்கம் சிவராஜா

பாடசாலைக்கு கிடைக்கும் கல்வி அபிவிருத்தி அமுலாக்கல் திட்ட நிதியின் மூலம் பாடசாலை மாணவர்களின் பின்னடைவு மட்டங்களை இனம்கண்டு அதற்கு ஏற்ப கைநூல்களைத் தயாரித்து வழங்கி கல்வியில் மேம்பாட்டை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

குறிப்பாக இன்று வரை வகுப்பு ரீதியாக மாணவர்கள் இனம் காணப்பட்டதன் அடிப்படையில் ஆசிரியர்களின் முயற்சியுடன் தமிழ்மொழி, மொழித்திறன் விருத்தி, கணிதம், குறுக்கெழுத்துப் புதிர், புதிர் வினாக்கள் என நூல்கள் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளன.

இப்படித் தெரிவிக்கிறார் அரியாலை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய அதிபர் பாலசிங்கம் சிவராஜா.

நல்லூர் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட இப் பாடசாலை 1995 ஆம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டுக்காலப் பகுதிகளில் இடம்பெற்ற இடப்பெயர்வுகள் காரணமாக இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட பாடசாலையாகும்.

திண்ணைப் பாடசாலையென்று 1932 ஆம் ஆண்டு இரவுப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 1934 ஆம் ஆண்டு முதல் பகல் நேரப் பாடசாலையாக அரசினால் கையேற்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

தரம்1 முதல் தரம் 10 வரை வகுப்புகளைக் கொண்ட இப் பாடசாலையில் 124 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இடம் பெயர்வதற்கு முன்னர் இப்பாட சாலை 350 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கியது.

தற்போது 14 நிரந்தர ஆசிரியர்களையும், 3 பகுதிநேர ஆசிரியர்களையும் கொண்டு இயங்குகின்றது. விவசாயம், வர்த்தகம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கே வாரத்தில் இரண்டு நாள்கள் பகுதிநேர ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றார்கள்.

பாடசாலை மாணவர்களின் முன்னேற்றத்தில் அதிபரும், ஆசிரியர்களும் இணைந்து இயங்குவதுடன் பெற்றோர்களும் சுற்றாடலில் உள்ளவர்களும் அக்கறையுடன் செயல்படுகின்றார்கள் என்பதைம் உணரக் கூடியதாக உள்ளது.

கடந்தாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 10 மாணவர்கள் தோற்றிய போதிலும் எவரும் சித்தியடையவில்லை. இதேபோன்று ஜி.சீ.ஈ.சாதரண தரப் பரீட்சைக்கு 10 மாணவர்கள் தோற்றி ஐந்து மாணவர்கள் சித்தியடைந்து வேறு பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் கற்கிறார்கள்.

இங்கு கற்கும் மாணவர்கள் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே உள்ளார்கள்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகப் பெற்றோர்கள் தங்களால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்து வருகின்றார்கள்.

கடந்தாண்டு இடம்பெற்ற தமிழ் தினப்




போட்டியில் தரம் 7 மாணவன் ப.நிசாந்தன் கோட்டமட்டத்தில் வாசிப்புப் போட்டியில் முதலாம் இடத்தையும் வலயமட்டத்திலும் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இதே போன்று கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் ஆங்கில தினப்போட்டிகள், சமய அறிவுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றிலும் கலந்து கொண்டு மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

ஆரம்பப் பிரிவுக்கான ஆங்கில ஆசிரியர், சித்திர ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாத நிலை இப்பாடசாலையில் காணப்படுகின்றது. இதே போன்று ஆரம்பப் பிரிவுக்கான சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ள போதும் அது முழுமை பெறவில்லை.

இதற்கு நலன் விரும்பிகள் நன்கொடையாளர்கள் உதவி செய்யவேண்டுமெனப் பாடசாலை நிர்வாகம் எதிர்பார்க்கின்றது.

மாணவர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்பப் பாடம் முதன்மைப்படுத்தப்பட்டு கற்பிக்கப்பட்டு வரும் நிலையிலும் இப் பாடசாலை மாணவர்களின் கணனிக் கற்றலுக்கான நடவடிக்கைகளில் கல்வித் திணைக்களம் கவனம் செலுத்தவில்லையென்பதை கற்கும் மாணவர்கள் மூலம் அறியமுடிகிறது.

பாடசாலையில் கற்பித்து தற்போது வெளிநாடு சென்றுள்ள ஆசிரியை திருமதி செம்பொற்சோதி பாடசாலைக்கு ஒரு கணனியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

## மாணவர்களுக்கு அன்றாட விடயங்களும் உரிய முறையில் தெரியப்படுத்தப்பட வேண்டும்

பாடசாலை அதிபருக்கான அலுவலக வசதி இல்லாத நிலையில் வகுப்பறை ஒன்றே அதிபர், உப அதிபர் மற்றும் ஆசிரியர்களின் இளைப்பாறும் அறையாக உபயோகிக்கப்படுகின்றது.

சமயலறை வசதியற்ற நிலையில் மாணவர்களின் உலக உணவுத்திட்டமும் செயல்படுதப்படுகின்றது.

மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்த்தெடுப்பதில் மைதானம் இல்லாமையும் பெரும் தடையாகவே இருக்கின்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இயங்கவில்லை. அதனை இயங்க வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைக்கு வருகைதாரத மாணவர்கள் விடயத்தில் கல்வி வலய அலுவலர்கள் பாடசாலை அதிபருடன் இணைந்து மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோர்களுடன் கதைத்து பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்து வருவதில் ஈடுபடுகின்றமை பாராட்டுக்குரியது.

பாடசாலைமாணவர்களுக்கு அயலில் உள்ளவர்கள் தமது உறவினர்களின் ஞாபகார்த்தமாக பாடசாலை உபகரணங்களையும் மற்றும் மதிய உணவையும் வழங்கி வருகின்றார்கள். அண்மையில் வேல்ட் விஷன் நிறுவனம் 25 மாணவர்களுக்கு சப்பாத்துகளை வழங்கியது.

பாடசாலையின் அபிவிருத்தியில் இப் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் அயராது உழைப்பதுடன் பொதுச் சுகாதாரம், மாணவர் சுகாதாரம் ஆகியவற்றில் பாடசாலைக்கு அடிக்கடி பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் கவனம் எடுத்து வருகின்றார்கள்.

இதே போன்று யாழ்.மாநகரசபை அதிகாரிகள் பாடசாலை மலசல கூடம் துப்புரவு செய்வதற்கு உரிய ஊழியர்களை அனுப்பி உதவி செய்து வருகின்றார்கள்.

காலையில் பாடசாலை ஆரம்பமாகும் முன் பிரார்த்தனையுடன் நாளாந்தம் வெளியாகும் தினசரிகள் வாசித்து மாணவர்களுக்கு அன்றாட விடயங்களை தெரிவிக்கும் செயல்பாடும் முன்னெடுக்கப்படுகின்றது.

முறைசாரக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் பின்தங்கிய மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் செயல்பாடும் இடம்பெறுகின்றது.

பாடசாலைக்கு காவலாளி இல்லாத நிலையில் ஆசிரியர் கழகத்தின் நிதி உதவியுடன் காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டு பாடசாலை உடைமைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதேபோன்று சமையல்பாத்திரங்களின் தேவையை கருத்தில் கொண்டு தியாகி அறக்கொடை நிறுவனம் கடந்த மாதம் சமையல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

அயலில் உள்ள பிரபல பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு அனுமதி பெறப் பெற்றோர்கள் பல ஆயிரங்களை நன்கொடையாக வழங்க வேண்டியுள்ளது. இப் பாடசாலையை உரியவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தினால் கூடிய பலனை கிராமமும், மாணவர்களும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. ✱

**பவித்திரன்**

# பாடசாலைகள் தமது கல்விப் பணியில் புதிய அணுகுமுறைகளைப் புகுத்த வேண்டும்



*சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பியுடனான நேர்காணலின் ஒரு பகுதி கடந்த 4ஆம் திகதி வெளியாகியது. அதன் இறுதிப்பகுதி இங்கே பிரசுரமாகிறது.*

இந்த புதிய சூழலில் பள்ளிகளும் தமது பங்கு மற்றும் பணி தொடர்பாக புதிய அணுகுமுறையை, வழிமுறையை, தொழிற்பாடுகளை ஏற்படுத்தியாக வேண்டும்.

பிள்ளைகளை படிக்கச் செய்தல் என்பது முதன்மையான தேவையாகி விட்டது. பிள்ளைகளுக்கு பள்ளியிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் நிறையவே கற்பிக்கின்றோம்; நிறையவே சோதனைகளை நடத்தி மதிப்பீடுகள் செய்கிறோம். இவற்றுக்கிடையே ஓர் அம்சம் வசதியாக நழுவிப் போய்விட்டது. அதுதான் ''பிள்ளைகள் தாம் கற்றுக் கொள்ளுதல்'' என்பது இந்தக் கற்றுக் கொள்ளுதல் தொடர்பான வசதிகள், முறைகள், நாட்டம், பாணி, கால நீட்சிஎன்பனவேமாணவரிடையிலானஅடைவு மற்றும் பெறுபேறுகளின் வேறுபாட்டை உருவாக்குகின்றன.

இதனால் பாடசாலைகள் ''கற்குமாறு செய்தல்'' என்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். தமது பாடசாலை நிகழ்ச்சி நிரலிலும் வள ஒதுக்கீட்டிலும் இதனை உள்வாங்க வேண்டும்.

வாரத்தில் இரண்டு பாடவேளைகளிலேனும் இதற்கான வழிகாட்டல் மற்றும் ஊக்கப்படுத்தல் நடவடிக்கைகளை, மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் தாமாக கலந்துரையாடுதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டி ஊக்கப்படுத்த வேண்டும். சுதந்திரமாகச் சிந்திக்கவும் கருத்தை வெளிப்ப டுத்தவும், கருத்தொருமைப்பாட்டைக் காணவும், முடிவுகளை மேற்கொள்ளவும் உதவ வேண்டும். இதற்கான கற்றலுக்கான கலந்துரையாடல் வகுப்புகள் (Discussion Classes for Learning) நடத்தப்படவேண்டும். இதற்கென ஓர் அணி ஆசிரியருக்கு பயிற்சிவழங்க முடியும். 8-13 வகுப்பு வரையான மாணவருக்கு இந்த ஏற்பாடு அதிக பயன் தரும். மொழி விருத்தி, பகுப்பாய்வுத்திறன், நட்புணர்வு, தலைமைத்துவம் என்பவற்றை விருத்தி செய்வதனூடாக கற்றுக் கொள்வதற்கு இவை உதவும்.

விடைகளைத்தேடுதல், கண்டறிதல், தொகுத்தல், நிரல்படுத்தல், முன்னுரிமையளித்தல், நேரமுகாமை, அழகாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தல், கூர்மையான விடைத்தேர்வு, மிகச்சரியான கலைச்சொல் பிரயோகம் போன்ற பல விடயங்களைப் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பதில் பள்ளிக்கூடங்கள் கவனம் செலுத்தவேண்டும். பரீட்சைக்கால ஏற்பாடாகவன்றி வாரத்தில் 40 அல்லது 80 நிமிடங்கள் ஒதுக்கி இதனை ஒழுங்காகச் செய்து வரவேண்டும் பரீட்சகர்கள், நிபுணத்துவம் பெற்றவர்கள், பாடஆசிரியர்கள் இதில் ஈடுபடுத்தப்படலாம். விடையளிக்கும்திறன்கள் (Alnswering Skills) மாணவரிடம் வளர்க்கப்படவேண்டும். மாதிரி வினாத்தாள் தயாரிப்பு, மாதிரி பரீட்சைகள், மதிப்பீட்டு குறிப்புகள் என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பரீட்சைகளில் எதை எழுத வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பது மாத்திரம் போதாது. எந்தை செய்யக்கூடாது? எது உங்கள் வினைத்திறனை குறைக்கின்றது? போன்ற விடயங்களையும் மாணவருக்கு

## மாணவர்களின் சுதந்திரமான கற்றலுக்கு கலந்துரையாடல் வகுப்புகள் அவசியம்

சொல்லி கொடுக்க வேண்டும். மாணவர்களின் மாதிரிப் பரீட்சைகளில் விடும் மிக மோசமான பலவீனங்களை இனங்காண வேண்டு ம். ஆனால் குறித்த மாணவரை அடையாளப்படுத்தக் கூடாது. அது மன முறிவையே ஏற்படுத்தும். இந்த விடையளிக்கும் வகுப்புகளை வாரந்தோறும் சீராக நடத்த வேண்டும். தேவைப்படின் பெற்றோர், தனியார் கல்வி நிறுவனங்கள், பழைய மாணவர்கள்; அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகளையும் பாடசாலைகள் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகள் தமக்கிடையிலும் கூட்டாக பல வேலை களைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

இப்புதிய திசையில், சற்றுக் கூடுதலாக கவனம் செலுத்தி மாணவரை கற்கச் செய்வோம். மாணவர் மைய கற்றல் நிறுவனங்களாக பாடசாலைகளை மேலும் தரமுயர்த்து வோம் பெற்றோர்-மாணவர்-பாடசாலை-தனியார் கல்வி நிறுவன கற்றல் தொடர்சங்கிலி ஏற்பாட்டை செம்மைப்படுத்துவோம். கற்றலில் சமநிலையை உருவாக்கி எம் பிள்ளைகளை மேம்படச் செய்வோம். ✱

**நேர்காணல்: பரராஜசேகரம் இராஜேஸ்வரன்**



இளவாலை மாரிசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் விளையாட்டுவிழா அண்மையில் இடம் பெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் பாதுகாப்பு கல்வித் திட்ட இணைப்பாளர் பி.செல்வறஜித், மாரீசன்கூடல் கிராம அலுவலர் எஸ். சூரியகுமார், சமுர்த்தி அலுவலர் திருமதி எஸ். றோகினி ஆகியோருடன் பாடசாலை அதிபர் எஸ். என். உதயகுமார், ஆசிரியர்கள், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் எடுத்துக் கொண்டபடம். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளருக்கு எதிரான அச்சுறுத்தலை உடனடியாகக் கைவிடுமாறு அரசுக்கு அழுத்தம்!

## சர்வதேச ஊடகவியலாளர்களின் மலேசிய அமர்வில் தீர்மானம்

கொழும்பு,பெப்.7

கொலை மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் வெறுப்பைத் தூண்டும் வார்த்தைப் பிரயோகங்கள், அதிகாரவர்க்க நடவடிக்கைகள் மூலம் பத்திரிகையாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் வன்முறைகளைத் தூண்டுவதை உடனடியாகக் கைவிடுமாறு ஆசிய, பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் அமைப்புகள் இலங்கை அரசையும் ஜனாதிபதியையும் கோரியுள்ளன.

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள அதிகாரிகளினதும், சுதந்திரமான விமர்சனத்திற்காக அதிருப்தியடைந்துள்ள அரச அதிகாரிகளினதும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள எமது சகாக்களின் பாதுகாப்புக் குறித்து கவலை கொண்டுள்ளோம் என அந்த அமைப்புகள் கூட்டாகத் தெரிவித்திருக்கின்றன.

மலேசிய தலைநகரில் இடம்பெற்ற அந்த அமைப்புகளின் பிரதிநிதிகளின் மாநாட்டின் பின்னரே அந்த அமைப்புகள் இது குறித்து தெரிவித்துள்ளன.

ஊடகவியலாளர்களுக்கு எதிராகப் பொருளாதார - சட்டரீதியான தடைகள், பத்திரிகைத்தாளைக் கட்டுப்படுத்துவது, அதிகாரிகளைப் பயன்படுத்தி கண்மூடித்தனமான சோதனைகளை மேற்கொள்வது போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

ஆசிரிய பீடத்திற்கும் அலுவலகத்திற்கும் நேரடியாக அழைப்பு விடுப்பதன் மூலம் செல்வாக்குச் செலுத்த முனைவது மற்றும் பத்திரிகையாளர்களையும் ஊடகப் பணியாளர்களையும் பூதாகரமாக சித்திரிப்பது போன்றவற்றையும் தவிர்த்துக் கொள்ளுமாறு ஊடக அமைப்புகள் கூட்டாகக் கேட்டுக்கொண் டுள்ளன.

இது தொடர்பாக அவற்றின் அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:-

இலங்கையில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சுந்திரமாகச் செய்திகளை வெளியிடுவதற்கான ஊடகங்களின் உரிமையைப் பேணுமாறு ஆசிய-பசுபிக் பிராந்தியங்களின் உள்ள ஊடகவியலாளர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள், மலேசியாவில் கூடிய எமது கூட்டத்தின் தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் கோருகின்றோம்.

இலங்கை போரை நோக்கி ஆழ்ந்து வருகையில், கருத்துவெளியிடும் சுதந்திரத்திற்கான கோட்பாட்டையும், ஊடகவியலாளர்களின் உரிமைகளையும் இலங்கை அதிகாரிகள் அளவுக்கு அதிகமாக பரிகாசம் செய்வது குறித்து நாம் எச்சரிக்கைப்படுத்தப்பட்டிருக்கின்றோம்.

வன்முறை அச்சுறுத்தலுக்கு உள்ளாகாமல் சுதந்திரமாக செய்தி வெளியிடுவதற்கு ஊடகவியலார்களுக்கும் ஊடகங்களுக்கும் உள்ள உரிமையை மோசமாக நிராகரித்து, பொறுப்பற்ற முறையில் அதிகாரிகள் செயற்படுகின்றனர் என்பதை அவர்களது அண்மைக்கால நடவடிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

குற்றவியல் அவதூறுச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் கடும் விமர்சனச் செய்திகளை வெளியிட்ட முன்னணி ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், ஊடகத் தணிக்கையைக் கொண்டுவரவேண்டும் எனவும் இலங்கை இராணுவத் தளபதியும், பாதுகாப்புச் செயலாளரும் கோரியவையும் இவற்றில் அடங்கும்.

பத்திரிகையாளர், பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியனவற்றிக்கு எதிராக அவமரியாதைப் படுத்தும் விதத்திலும் தீங்கிழைக்கும் நோக்கிலும் அரசின் அங்கத்தவர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள் ஆகியோர் வெளிப்படுத்திய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கையில் எங்கள் சகாக்கள் குறித்து நாங்கள் அதிகம் கவலையடைகின்றோம்.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான உளவியல், உடல்ரீதியான வன்முறைகளில் ஈடுபடுபவர்களை நீதியின்முன் நிறுத்தத் தவறும் அரச உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் ஊடக - எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தவறுவதும் ஊடக சுதந்திரத்தை மதிக்கவில்லை என்ற செய்தியை தெரிவிப்பதாகவே அமையும் என்பதை ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் தெரிவிக்கின்றோம் - என்று உள்ளது. (சி)

## மடுக் கிளைமோரில் காயமடைந்திருந்த மாணவன் மரணம்

கிளிநொச்சி,பெப்.7

மன்னார் தட்சணாமருதமடுப் பகுதியில் கடந்த 29ஆம் திகதி பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த மாணவர்களில் ஒருவர் திங்கட்கிழமை உயிரிழந்தார்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஜெனிஸ்ரன் பீரிஸ் (வயது - 12) என்ற மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# விடுதலைப் புலிகளை தடுக்கும் நடவடிக்கையில் தமிழக அரசு மீது காங்கிரஸ் மேலிடம் திருப்தி



புதுடில்லி,பெப்.7

விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நடவடிக்கையில், தமிழக அரசு மீது காங்கிரஸ் மேலிடம் திருப்தி அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படும் அதே வேளை; தமிழக அரசை 'டிஸ்மிஸ்' செய்யும் எண்ணம் இல்லை என்பதையும் காங்கிரஸ் கட்சி மறைமுகமாக வெளிக்காட்டியுள்ளது.

கடந்த சில தினங்களாக தமிழகத்தில் அனல் பறக்கும் விவாதமாக விடுதலைப் புலிகள் பிரச்சினை எழுந்துள்ளது. விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் சக்திகளை தமிழக அரசு கண்டும் காணாமல் இருப்பதைப் போன்ற ஒரு குற்றச்சாட்டு காங்கிரஸ் தரப்பில் இருந்து முன்மொழியப்பட்டு வருகிறது. சட்டசபையில் காங்கிரஸ் சார்பில் பீட்டர் அல்போன்ஸ், ஜெயக்குமார், சி.ஞானசேகரன் ஆகியோர் பேசியதில் இருந்து இப்பிரச்சினை சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. அவர்களைத் தொடர்ந்து நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்தில் மத்திய அமைச்சர் ப. சிதம்பரமும் தமிழக அரசின் நடவடிக்கையை விமர்சித்தார். இதனால், முதல்வர் கருணாநிதி பெரும் அதிர்ச்சி அடைந்தார்.

மத்திய அரசில் நிதியமைச்சர் அந்தஸ்தில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த ஓர் அமைச்சர் விடுதலைப் புலிகள் விவகார ம் குறித்து பேசியது, மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று உணர்ந்த முதல்வர் கருணாநிதி அதற்கு காரசாரமாகப் பதிலளித்தார். சென்னையில் நடந்த ஒரு திருமண விழாவில் முதல்வர் பேசிய போது, விடுதலைப் புலிகளை நாங்கள் ஆதரிப்பதாக வீண்பழி சுமத்துகின்றனர். இந்தப் பழியை போட்டுத்தான் ஆட்சி மாற்றம் வரும் என்றால் அதை சந்திக்கத் தயாராக உள்ளோம் என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.



தமிழக முதல்வரின் இந்தப் பேச்சு, தமிழக அரசியலில் மட்டுமின்றி, டில்லி அரசியல் வட்டாரத்திலும் பரபரப்பை ஏற்படுத்தியது. அமைச்சர் சிதம்பரத்துக்கும், முதல்வர் கருணாநிதிக்கும் இடையில் எழுந்த கருத்து மோதல் குறித்து காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளுமே தங்களது கருத்துகளை தெரிவித்துள்ளன. டில்லியில் நிருபர்களிடம் நேற்றுப் பேசிய காங்கிரஸ் மேலிட செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி, ''காங்கிரஸுக்கும், தி.மு.க.வுக்கும் இடையிலான உறவில் எந்த நெருடலும் இல்லை. ஐக்கிய முற்போக் குக் கூட்டணியில் மிக முக்கியமான தலைவர் கருணாநிதி. அவர் சொல்வதைப் போன்று பிரச்சினை இருப்பதற்கு நிஜத்தில் மட்டுமல்ல; கற்பனையிலும் கூட இடம் கிடையாது. எனவே, காங்கிரஸுக்கும், தி.மு.க.வுக்கும் இடையில் கருத்து வேறுபாடு எழ வாய்ப்பே இல்லை '' - என்றார். (சி)

# எத்தகைய அடக்குமுறையையும் எதிர்கொள்வோம்! ஈழத் தமிழர்களுக்காக தொடர்ந்து போராடுவோம்!!

## விடுதலைச் சிறுத்தைகள் அறிவிப்பு



சென்னை,பெப்.06

''விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் மீது எத்தகைய அடக்குமுறைகள் திணிக்கப்பட்டாலும் ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு என்ற கொள்கையிலிருந்து நாங்கள் பின்வாங்கமாட்டோம்; அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க தொடர்ந்து போராடுவோம்''

- இவ்வாறு சூளுரைத்திருக்கின்றார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவன்.

கடலூரில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு சார்பில் கட்சிக் கொடியேற்றுவிழா மற்றும் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விழாவுக்கு கடலூர் நகரசபை துணைத் தலைவர் தாமரைச்செல்வன் தலைமை தாங்கினார். நகர செயலாளர் புகழேந்தி முன்னிலை வகித்தார். முகாம் அமைப்பாளர் குணசேகரன் வரவேற்றுப் பேசினார். விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிப் பொதுச் செயலாளர் திருமாவளவன் கலந்துகொண்டு கட்சிக் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

அங்கு அவர் கூறியவை வருமாறு:-

''சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கருத்துரிமை மாநாடு தமிழக அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது சட்டசபைவரை எதிரொலித்து தற்போது மத்திய அரசுக்குள் தர்மசங்கடமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. எங்களது அமைப்பைத் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுத்துவருகின்றார்கள். என்னைக் கைதுசெய்யும்படியும் வலியுறுத்தி வருகின்றார்கள். இப்படியாக எத்தகைய அடக்குமுறைகள் நம்மீது திணிக்கப்பட்டாலும் அவை நம்மை ஒன்றும் செய்யமுடியாது.

''ஈழத் தமிழர் பிரச்சினையில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் கருத்தில் - கொள்கையில் - முரண்பாடு கிடையாது. எங்களது கொள்கையிலிருந்து பின்வாங்க மாட்டோம். போராட்டம் என்று வந்தால் முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டோம். ஈழத்தமிழர்களின் கொள்கை வெற்றிபெறும்வரை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தொடர்ந்து போராடும்.- என்று கூறினார். (சி)

## கந்தபுராண மீள்பதிப்பு வெளியீடு

சுழிபுரம்,பெப்.7

கந்தபுராண படன செய்யுள் பொழிப்புரையுடன் மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளத. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினரின் முதியோர் இல்லத்தில் வைத்து இது வெளியிடப்படவுள்ளது. சுழிபுரத்தைச் சேர்ந்த ஆனந்த வடிவேல் தம்பதியினரால் இது வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (203-28)

# வடக்கு - கிழக்கில் நிலைத்த யுத்தம் தென்பகுதிகளுக்கும் பரவியுள்ளது

## ஐ.தே.கவின் கஜந்த எம்.பி. கூறுகிறார்

''வடக்கு - கிழக்கில் மட்டும் இடம் பெற்று வந்த யுத்தம் இன்று தென்பகுதிக்கும் பரவியுள்ளது''

- இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:-

பாதுகாப்பின்றி மக்கள் அச்சத்துடன் வாழும் சூழ்நிலையே இன்று உள்ளது இந்த நிலை அரசுக்குத் தெரியவில்லை.

குண்டுத்தாக்குதல்களில் மக்கள் பலியாகின்றனர். ஆனால், இதற்கு அரசு அதற்கு விலையைக் கொடுக்கின்றது. அதாவது குண்டுவெடிப்பில் இறக்கும் மக்களுக்கு பணம் கொடுத்து அவர்களது தியாகத்தை அரசு கேவலப்படுத்துகின்றது.

குண்டுவெடிப்புகளுக்கு அஞ்சப்போவதில்லை என்கின்றது அரசு. ஆனால், இங்குள்ள மக்களை யார் பாதுகாப்பது? ரயில்களிலும் பஸ்களிலும் செல்லும் மக்கள் தானே பலியாகின்றனர். அதனால் இங்குள்ள அமைச்சர்கள் சிலர் குண்டுவெடிப்புக்களைக் கண்டு அஞ்சப்போவதில்லை என்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் மட்டும்தான் இதுவரை போர் நடைபெற்றது. இன்று அது தென்பகுதிக்கும் பரவிவிட்டது. இதுவரை உயிர்த்தியாகம் செய்த படை அதிகாரிகளினதும், தளபதிகளினதும் அர்ப்பணிப்பை சிலர் கொச்சைப்படுத்துகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் தனது ஆட்சிக்காலத்தில் போரை நடத்தியது. கிழக்கை மீட்டு தேர்தலையும் நடத்தியது. பிரேமதாச ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளுடனான போர் மற்றும் ஜே.வி.பியுடனான போர் என்பனவற்றிற்கும் முகம் கொடுத்திருந்தோம். ஆனாலும், மக்கள் இன்றுள்ள அளவுக்கு துயரங்களை அனுபவிக்கவில்லை - என்றார். (சி)

## மாணவர் பாதுகாப்பில் அதிபர்கள் அதிக கவனம் செலுத்துமாறு பணிப்பு

கொழும்பு,பெப்.7

தெற்கில் நடைபெற்றுவரும் குண்டுத் தாக்குதல்களை அடுத்து பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக அதிக கவனம் செலுத்துமாறு கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களைக் கேட்டிருக்கிறது.

கல்வி அமைச்சின் செயலாளர் நிமால் பண்டார சகல பாடசாலை அதிபர்களுக்கும் எழுத்துமூலம் இதனை அறிவித்திருக்கிறார்.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக சகல பாடசாலைகளினதும் அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டும் -

விளையாட்டுத் துறை சம்பந்தமாக அல்லது வேறு முக்கிய நிகழ்வுகளுக்கு பாடசா லைகளில் இருந்து மாணவர்களை வெளியே அனுப்ப வேண்டாம் என்றும் -

அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸாரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுமாறும் பாடசாலை அதிபர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஊடக சுதந்திரத்துக்காக உலகளாவிய ரீதியில் குரல்

புண்ணாகிப் புரையோடிப் போய்ப் பேரழிவைத் தந்தபடி இருக்கும் இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதை விடுத்து இராணுவத் தீர்வில் - போர்வெறித் தீவிரத்தில் - நாட்டம் கொண்டு துடியாய்த் துடிக்கின்றது கொழும்பு.

சகல தரப்பினருக்கும் நியாயம் செய்கின்ற ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிவதை விடுத்து -

உரிமைக்காகக் குரல் எழுப்பும் சிறுபான்மை இன மக்களின் பேரம்பேசும் வலுவான ஆயுத பலத்தை அடியோடு தகர்த்து, அவர்களை வலுவற்றவர்களாக்கிவிட்டு, தான் விரும்பும் ஒரு முடிவைத் தீர்வுத் திட்டமாக அவர்கள் மீது திணிப்பதே கொழும்பு அதிகார வர்க்கத்தின் - பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தின் - ஒரே தீர்மானம் என்பதும் வெளிப்படை.

இந்த நிகழ்ச்சி நிரலின்படி விடயங்கள் வரிசையாக இங்கு கட்டவிழ்ந்து வருவதை நாம் அவதானிக்க முடியும்.

இவ்வாறு தான் விரும்பியதை தீர்வு என்ற பெயரில் திணிக்கும் தனது வலோற்கார எத்தனத்தின் பல்வேறு துணை நடவடிக்கைகளாகவே, அரச ஆதரவிலான மனித உரிமை மீறல்களை இங்கு அரங்கேற்றி வருகின்றது அதிகார வர்க்கம் என்பதும் தெளிவு.

உண்மைகள் வெளியாகாமல் மூடிமறைக்கச் செய்வதும் இந்தத் தந்திரோபாயத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு முக்கியமானது என்பதால் அதற்காகப் பல்வேறு விஷமத்தனமான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

ஊடகங்களின் வாய்க்குப் பூட்டுப் போடுவதுபோல எடுக்கப்படும் நடவடிக்கைகளின் பின்னணி இதுதான்.

ஒருபுறம் - அதிகார வர்க்கத்தின் ஊழல், மோசடிகள், குளறுபடிகள், அதிகார துஷ்பிரயோகம் போன்றவை.

மறுபுறம் - இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் தொடர்பாகவும் யுத்தம் தொடர்பாகவும் அரசுத் தலைமை பண்ணும் குளறுபடிகள், பொய்ப்பிரசாரம், தவறான கையாள்கை, விஷமத்தனங்கள் போன்றவை.

இந்த இரண்டையும் மக்களுக்கு அம்பலப்படுத்தி, உண்மை நிலையை உறைப்பாக உணரச் செய்யும் வகையில் உரைப்பவர்களாக ஊடகவியலாளர்கள் திகழ்வதால் அவர்களுக்கு எதிராக அதிகாரத்தின் அரூபக் கரங்கள் ஆழமாகப் பாய எத்தனிக்கின்றன.

யுத்தம் பற்றிய செய்திகள் வெளியிடுவதைத் தடை செய்யவேண்டும், முன்னர் ஒழிக்கப்பட்ட குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீளவும் கொண்டுவரவேண்டும் என்றெல்லாம் அதிகார வர்க்க உயர் பீடங்கள் எச்சரிக்கை அறிவிப்பு விடுகின்றமையும் இத்தகைய நியாயமற்ற அழுத்தங்களின் அங்கங்கள்தாம்.

ஒரு ஜனநாயக நாட்டின் நான்காவது தூணாக - காவல் அரணாக - மதிக்கப்படுவது ஊடகத்துறை.

அதன் வாயை இறுகப் பூட்டுப் போட்டு மூடவேண்டும் என்று பகிரங்கமாகக் கூறும் அளவுக்கு அதிகார மமதைத் திமிர் ஆட்சிப் பீடத்துக்கு ஏற்பட்டிருப்பதால் நாட்டின் ஜனநாயக ஆட்சி கேலிக்கூத்தாகி விட்டது.

கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு எதிராக - அடிப்படை உரிமைக்கு எதிராக - கிளர்ந்தெழுந்திருக்கும் இந்த ஆட்சி முறை அராஜகத்தின் போக்கை ஆட்சேபித்து சர்வதேச அமைப்புகளும் மனித உரிமை இயக்கங்களும் கடுமையாகக் குரல் எழுப்பத் தொடங்கியிருக்கின்றமை இப்போது புதிய அம்சம். இதனால் இந்த விவகாரம் இப்போது ஒரு புதிய பரிமாணத்துக்குள் பிரவேசித்திருக்கின்றது.

ஊடகவியலாளர்களுக்கும், ஊடகங்களுக்கும் எதிரான வன்முறை அச்சுறுத்தல் பற்றிய தகவல்கள் தினசரி ஒரு புறம் வெளியாக -

அத்தகைய செயற்பாடுகளுக்கு எதிரான சர்வதேச கண்டனங்களும், சாடல்களும் கூட மறுபுறம் தினசரி வெளியாகத் தொடங்கியிருக்கின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையிலிருந்து ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச அமைப்புகள் வரை பல்வேறு நிறுவனங்கள் இலங்கையில் ஊடக அடக்கு முறைக்கு எதிராகக் காத்திரமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. அவை, இங்கு அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் தமது கடமையை ஆற்றுவதற்காகப் போராடி வரும் பேனாப் போராளிகளை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, உயிர் கொடுத்து நிற்கின்றன.

இலங்கையில் ஊடக அடக்குமுறைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் திரண்டு வரும் எதிர்ப்புணர்வுகளை - எதிர்ப்பலைகளை - இலங்கையின் அதிகார வர்க்கம் புரிந்து கொண்டு தன்னைத் திருத்த முயலவேண்டும். இல்லையேல் ஊடக சுதந்திரம் இறந்துபோன நாடுகளின் வரிசையில் இலங்கையையும் சேர்த்து, விபரீத நடவடிக்கைகளை சர்வதேசம் எடுப்பதற்கு அது வழி செய்துவிடும்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள் கடைசியாக வெளியிட்ட அறிக்கையில் கூட, சுதந்திரமான ஊடகப் பணிக்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் ஊடகவியலாளர் தமது கடமைகளைச் செய்யவும், சகல இடங்களுக்கும் போய் உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திக் குறிப்பிடப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

# தமிழ்- முஸ்லிம் மக்களின் இனவிடுதலைக்கு தாம் உழைப்பாரென இமாம் எம்.பி. உறுதி

## நாடாளுமன்றக் கன்னி உரையில் தெரிவிப்பு

''தமிழ் - முஸ்லிம் மக்களின் இன விடுதலையை இலக்காகக் கொண்டு செயற்படுவேன்'' - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுமுன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணியான ரஸீன் முஹம்மது இமாம் தமது கன்னியுரையில் தெரிவித்தார்.

மேலும், தமக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு நன்றி தெரிவிக்கிறார் என்று குறிப்பிட்ட அவர், அங்கு தொடர்ந்து கூறியிருப்பவை வருமாறு:-

பன்னெடுங்காலமாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவந்த தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு அன்னியோன்னியமாகப் பேணப்பட்டு வந்தது. அது நீண்டகால வரலாறு உடையதெனினும் முன்னுதாரணமாகச் சில நிகழ்வுகளை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

15 அங்கத்தவர்களைக் கொண்ட யாழ். மாநகரசபையில் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்கள் மட்டும் இருந்த வேளையிலும் கூட சட்டத்தரணி மர்ஹூம் எம்.எம்.சுல்தான் மேயராகத் தெரிவு செய்யப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

அது மட்டுமன்றி, 1979ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ். மாநகரசபைத் தேர்தலின்போது இரண்டு முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்டிருந்த மாநகரசபையில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் முஸ்லிம் அங்கத்தவர்களை மூன்றாக அதிகரித்துத் தந்த பெருமையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையே சாரும். அச்சபையில் நானும் ஓர் அங்கத்தவனாக இருந்து சேவையாற்றியதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தகைய தமிழ் - முஸ்லிம் உறவின் தொடர்ச்சியாக 1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலிலும் கூட ஒரு முஸ்லிம் அங்கத்தவரைத் தெரிவு செய்தமையானது தமிழ் மக்கள் முஸ்லிம்கள் மீது கொண்ட நம்பிக்கையையும் உளப்பூர்வமான அன்பையும் காட்டி நின்றது.

மேலும், தற்போதுள்ள விகிதாசாரத் தேர்தல் முறைக்கு முன்பாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரைத் தீர்மானிக்கும் சக்தியாக யாழ். முஸ்லிம்கள் இருந்து வந்தனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை யாழ். மாவட்ட தமிழ் மக்கள் பகிஷ்கரித்தபோது, வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களாகிய நாங்களும் தமிழ் மக்களுடன் இணைந்து பகிஷ்கரித்தோம். பெரும்பாலான தமிழ் மக்கள் வாக்களிக்காத நிலையில், நாம் சுயேச்சையாகப் போட்டியிட்டிருந்தால் குறைந்தது மூன்று பிரதிநிதிகளையாவது பெற்றிருக்க முடியும்.

ஆனால், சந்தர்ப்பவாத அரசியல் நடத்தி, நமது சகோதரத் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடாது என்ற ஒரே நோக்கில் தான், வெளியேற்றப்பட்ட சந்தர்ப்பத்திலும் கூட நாம் தேர்தலைப் பகிஷ்கரித்தோம்.

இத்தகைய சூழ்நிலையில் கடந்த முப்பது வருடங்களாக தமிழ் மக்களுடனான எனது உறவைப் பேணி வந்ததுடன், எந்த விதமான கட்சித் தாவலுமின்றி ஒரே கட்சியின்மீது நான் காட்டிவந்த விசுவாசத்தை உள்ளார்த்தமாக உள்வாங்கிக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம் மக்களை நோக்கி நீட்டிய நேசக்கரமாகவே இப்பதவியைப் பார்க்கிறேன்- என்றார். (சி)

# புலிகளின் நடமாட்டங்களை தமிழகம் கட்டுப்படுத்துகிறது

## இந்தியாவுக்கான இலங்கைத் துணைத்தூதர் பேச்சு

சென்னை,பெப்.7

'தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கருதுகிறேன்' என்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதர் பி.எம்.அம்ஸா தெரிவித்தார்.

இலங்கையின் 60ஆவது சுதந்திர தின விழா சென்னையில் அந்நாட்டுத் தூதுரக அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அந்நாட்டுக் கொடியை ஏற்றிவைத்த பின் அவர் பேசிய போது:

''இலங்கைப் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருகிறார். அதேசமயம் சோதனை முறையிலான எந்தத் திட்டத்தையும் செயற்படுவதை அவர் தவிர்க்க விரும்புகிறார். அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு முன்வைத்துள்ள இடைக்கால வரைவுத் திட்டம், தீர்வுக்கான பாதையை நோக்கி முன்னெடுத்துச் செல்லும் முதல் கட்டமாக இருப்பது வரவேற்கத்தக்கது - என்று கூறினார்.

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.7

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் த.கந்தையா தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (203-207)

* * *

யாழ்ப்பாணம், பெப்.7

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (1)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.7

நவாலி மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் வசந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளன.

பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி சறோஜினி நாகராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக நவாலி மகாவித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம், வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (203-95)

# திருமாவளவனை கைது செய்க; இளைஞர் காங்கிரஸ் தீர்மானம்

சென்னை,பெப்.7

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிவரும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவனைக் கைது செய்ய வேண்டுமென்று இளைஞர் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென் சென்னை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் அண்மையில் சத்தியமூர்த்தி பவனில் நடந்தது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழ் மண்ணில் கொடூரமாகக் கொலை செய்த விடுதலை புலிகளை, ஆதரித்து தொடர்ந்து பேசியும், செயல்பட்டும் வருவதுடன், விடுதலைப் புலிகளைக் கண்டித்து பேசும் தமிழக தலைவர்களை இழிவாக பேசி வரும் திருமாவளவனை உடனே கைது செய்யவேண்டும் என்று தமிழக அரசை இந்தச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இறைவன் அருவமா? உருவமா? அருவுருவமா?

சகுணம், நிர்க்குணம், சாகாரம், நிராகாரம் இவை உருவமுள்ளதையும் உருவமற்றதையும் குறிப்பிடுகின்றன. எது உருவமுள்ளது? எது உருவமற்றது? இங்கே தண்ணீர் இருக்கிறது. இதன் வடிவம் என்ன தண்ணீர் என்பது பெயர்தனே தவிர அதற்கு வடிவமில்லை.தண்ணீர் பனிக் கட்டியாகும் பொழுது அதற்கு உருவம் கிடைக்கின்றது. ஆனால் பனிக் கட்டியிலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளியும் உருவமற்றது. ஒவ்வொரு உருவத்திலும் உருவமற்றது அடங்கியிருக்கிறது. சிலர் எனக்கு உருவமற்றதில் உடன்பாடு இல்லை எனக் கூறுவார்கள். மற்றும் ஒரு சிலர் உருவத்தினை அடிப்படையாகக் கொண்டு பேசுவர். இதெல்லாம் அஞ்ஞானம். உருவமற்றதும் உருவமுள்ளதும் இரண்டும் ஒன்றே. உருவமற்ற நீர்த்துளியிலிருந்து உருவமுள்ள ஐஸ்கட்டி உருவானது எப்படி?

வேதாந்தம் அதன் ஆன்மீக உள்ளார்த்தத்தைத் தெளிவாகச் சொல்கின்றது. எத்தனையோ ஆன்மீக போதனையாளர்கள் தொலைக்காட்சிகளிலும் வானொலியிலும் எவ்வளவோ எடுத்துச் சொல்கின்றனர். சத்யம் என்றால் என்ன? நியாயம் என்றால் என்ன? என்றெல்லாம் விளக்குகின்றனர். இவை அனைத்தும் வெறும் புத்தக அறிவுதான். நடைமுறை அறிவாக மாறவேண்டும். அப்போது வடிவமும் மாறும்.

ஒரு சிறிய உதாரணம், சமுத்திர ஜலம் உப்பானது. ஆனால் சூரிய வெளிச்சத்தால் ஆவியாகிறது. உப்புச் சத்துக் காணப்படுவதில்லை. பிறகு அது மேகமாக மாறுகிறது. பின்னர் மேகமே மழைத்துளியாக மாறி கீழ் இறங்குகிறது. மழை நீர் தூய்மையானது. சுவையானது. இது எப்படி? இத்தகைய மதுரமும் தூய்மையும் சமுத்திர நீரில் உண்டா? அதே விதமாக அனுக்கிரகம் என்ற சாகரத்தில், பகவானின் அருள் என்ற சூரியக் கதிர்கள் பட்டு மனதில் இனிமை எழுந்து அமைதி நிலவுகிறது.



சாயி சிந்தனை

## நாளை

| | |
|---|---|
| தை - 25 | வெள்ளிக்கிழமை 08.02.2008 |
| திதி : பிரதமை | முற்பகல் 9.47 |
| நட்சத்திரம் : | அவிட்டம் முற்பகல் 9.34 வரை |
| சுபநேரம் : | 06.35 - 08.05 |
| ராகுகாலம் : | 11.05 - 12.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **அழகம்மா கந்தசாமி** (மேரிபோல்)

(முன்னாள் ஆசிரியை, யா/சு நிமிட்டி மகளிர் கல்லூரி)

மண்ணில் 01.04.1941 — விண்ணில் 07.02.2005

ஆண்டுகள் மூன்று சென்றாலும் ஆறுமோ
எம் துயரம்
பட்டங்கள் இருந்தென்ன பதவிகள்
இருந்தென்ன
அம்மா என்றழைக்க யாருமில்லை
இப் பூவுலகில்
கர்த்தருக்குள் நீங்கள் மகிழ்ந்திருக்க
நாங்கள் காலமெல்லாம் நினைத்திருப்போம்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.
(70767)

**கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

**வயிரமுத்து ஐயாத்துரை**

( முன்னாள் சாரதி, இ.போ.ச., கோண்டாவில் சாலை)



கடந்த 08.01.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று(07.02.2008) வியாழக்கிழமை கோப்பாய் மத்தி அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (70846)

மனைவி **ஐ.இலச்சுமிப்பிள்ளை,
பிள்ளைகள், குடும்பத்தினர்.**


## குறைந்த கட்டணத்தில்

எந்த இடத்திலிருந்தும் எந்தத் தொலைபேசியிலும் வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக் கொள்ள 5/-

0777 554528 (சி/551261)


## மரண அறிவித்தல்

திருமதி

**கந்தையா சிவகாமிப்பிள்ளை**

இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சத்திரந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவகாமிப்பிள்ளை 05.02.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு- தில்லைவனம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் சுப்பிரமணியம், புவனேஸ்வரி, பாலாம்பிகை (கிராம உத்தியோகத்தர்J/46, காரைநகர் வடக்கு) ஆகியோரின் அன்புத் தாயும் தேவராசா (குட்டிமாமா, திருநெல்வேலி), தவமணிதேவி, நீலகண்டன் ஆகியோரின் அன்பு மாமியும் கார்த்திகேசு முத்தையாவின் அன்பு மைத்துனியும் தெய்வானைப்பிள்ளையின் சகலியும் சுதர்சன், ரவிசங்கர், ரவிமோகன், ரவிக்குமார், சுகன்யா, ரவிசுகந்தன், துயானு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2008) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சத்திரந்தை,
களபூமி,
காரைநகர்.

தகவல்:
**பிள்ளைகள்.**
(70867)

## யோகாசன, தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப்.7

சிவலிங்கயோகா கேந்திர நிலையத்தில் நடத்தப்படும் யோகாசன தியான வகுப்புகள் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை சிந்துபுரத்தில் அமைந்துள்ள காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

ஆண், பெண், முதியோர்என அனைவருக்கும் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிலையத்தினர் கேட்டுள்ளனர். (203)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.7

உலகக் கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படும் ரி.வி., றேடியோ திருத்தல் பயிற்சிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி, நுணாவிலில் அமைந்துள்ள அறவழிப் போராட்டக் குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களுடன் சமூகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


# VACANCY

## 1. Secretary

To work in full partnership with Caritas Office Manager in Program Activities. The post holder will have to undertake the following activities.

**Base Station:** Jaffna

**Main Duties:**

* The post holder reports directly to the Director of Caritas - Hudec -Jaffna & the office Manager.
* Assists the Management on all secretarial duties & programmatic matters compilation of beneficiaries' data (livelihood, housing and micro-finance), drafting letters independently etc.
* Translate documents to Tamil or English
* Prepare the minutes of weekly Coordination Planning Meetings.
* Maintain Address lists and contact numbers of national and international staff and other essential telephone numbers of organizations, hotels and services useful for the programme.
* Assist the Senior Construction Managers in correspondence, reporting, letter drafting or contracts to the finance manager with external organizations, governments, banks, supplier's beneficiary groups, including the related E-mail.

## 2. Documentation Officer

**Base Station:** Jaffna

**Main Duties:**

* Should be able to prepare narrative and statistical reports independently
* Knowledge on the maintenance of the Database would earn additional points
* Able to write case stories reflecting the main fact of the programme
* Taking minutes of the meeting
* Collection of statistics from GOs, NGOs and relevant Institutions and Company

**Requirements:**

* Good command of English
* Should have Secretariat / Administrative background.
* Advanced computer skills in Excel (Spreadsheet, Database Management Word (reporting, graphs)& Internet e-mail.
* Ability to work independently.
* Excellent analytical skills.
* Good team player.

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contact no. & minimal two references to the following address, latest by **15th February 2008.**

**Fr. C. G. Jeyakumar,
Director
Caritas-Hudec,**


தென்மராட்சி மேற்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி

பாவித்த லொறி ரயர்கள் விற்பனைக்கான


## கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்திலுள்ள 900-20 இலக்கமுடைய 06 லொறி ரயர்கள், விற்பனைக்கான கூறுவிலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 'பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி' என்ற முகவரிக்கு 15.02.2008 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி ரயர்களுக்கான கூறுவிலைகள் என எழுதப்பட வேண்டும். சங்க வேலை நேரத்தில் லொறி ரயர்களைப் பார்வையிடலாம்.

தெ.மே.பல நோ.கூ.சங்கம்,
கைதடி. (சி/551373)

**பொதுமுகாமையாளர்.**

## 8ஆம் ஆண்டு நினைவு



செல்வன்

**இராசரத்தினப் பத்தர் சுகந்தன்**

பிறப்பு 10.09.1975

இறப்பு 07.02.2000

ஆண்டுகள் எட்டு சென்றாலும்
உன் நினைவுகளுடன் வாழும்:

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (70825)

**குடும்பத்தினர்**
(நேசம் அழகு நகை).

## மரண அறிவித்தல்

**வைரமுத்து செல்லையா**

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் திருக்கேதீஸ்வரம் அடம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து செல்லையா (05.02.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் வசந்தாதேவி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற பாலாம்பிகை மற்றும் சண்முகநாதன் (கனடா), பரமேஸ்வரன், காலஞ்சென்ற கணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.02.2008) முழங்காவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

414/7, கோயில் வீதி,
நல்லூர். (70862)

தகவல்:
திருமதி V.செந்தில்நாதன்
(மகள்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18.10.1934



இறப்பு 20.01.2007

**அமரர் கந்தையா கனகரெத்தினம்**

திதி: 07.02.2008

அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எமை வளர்த்துப் பாரினிலே உயர வைத்தீர்!
பிள்ளைகளின் வளர்ச்சிக்காய் பெரும்பாடு பட்டுழைத்து
எள்ளளவும் உமக்கென்று ஏதொன்றும் செய்ததில்லை
எங்கு சென்றீர் எமைவிட்டு
எமைவிட இறைவன் உம்மை அதிகமாக நேசித்தாரோ?
தன் பாதம் பணியும் படி பணித்தாரோ!
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம்துயரம்.

82/7, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
(70859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக்கான தேர்தல்

# முக்கிய மாநிலங்களில் ஹிலாரி வெற்றி; பல மாநிலங்கள் ஒபாமா வசம்

வாஷிங்டன், பெப்.07

அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளரைத் தேர்ந்தேடுப்பதற்காக நேற்றுமுன்தினம் 21 மாநிலங்களில் நடந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்ரனும், குடியரசுக் கட்சி சார்பில் நியூ யோர்க் முன்னாள் மேயர் ஜோன் மெக் கெய்னும் முன்னிலை பெற்றுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர் வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள் ளது. ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடு வது யார் என்பதை முடிவு செய்வதற்கான வாக்கெடுப்பு அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகிறது. இதில் முக்கிய மாநிலங்களான நியூயோர்க், நியூ ஜெர்ஸி, டகோடா, இல்லினாய்ஸ், கனெக்டிகட் உள்ளிட்ட 21 மாநிலங்களில் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு நடை பெற்றது.

'சூப்பர் ரியூஸ்டே' என்று வர்ணிக்கப் பட்ட இந்த வாக்கெடுப்பில் ஹிலாரி கிளின் ரன் நியூயோர்க், கலிபோர்னியா, நியூ ஜெர்ஸி, மசாஷசெட்ஸ், ஒக்ஸ்ஹோமா, டென்னசி, அர்க்கன்சாஸ், அரிசோனா ஆகிய 8 மாநி லங்களில் ஒபாமாவைப் பின்னுக்குத் தள்ளி ஹிலாரி கிளின்ரன் வெற்றிபெற்றுள்ளார்.

எனினும், ஜோர்ஜியா, இல்லினாய்ஸ், உற்றா, வடக்கு டகோடா, கனாஸாஸ், டெலாவோ, அலாபாமா, மினசொட்டா, கொலரோடா, இடாஹோ, அலாஸ்கா, மிஸ் யூரி ஆகிய மாநிலங்களில் ஒபாமா வெற்றி பெற்றுள்ளார்.

இருந்தபோதும் முக்கிய - பெரிய மாநி லங்களில் வெற்றியைச் சுவீகரித்த ஹிலா ரிக்கு மொத்தமாக 725 பிரதிநிதிகள் 21 மாநி லங்களிலும் கிடைத்தன. ஒபாமாவுக்கு 625 பிரதிநிதிகளே கிடைக்கப்பெற்றன. இதன்மூலம் 'சூப்பர் ரியூஸ்டே' வாக்கெடுப் பில் ஹிலாரி கிளின்ரன் வெற்றிபெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

ஜனநாயகக் கட்சியிலிருந்து ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிடத் தகுதியான வர் மொத்தமாகவுள்ள 52 மாநிலங்களிலும் குறைந்தபட்சம் 2025 பிரதிநிகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

இதனிடையே குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்வதற் காக நடத்தப்பட்ட 'சூப்பர் ரியூஸ்டே' வாக் கெடுப்பில் நியூயோர்க் முன்னாள் மேயர் ஜோன் மெக்கெய்ன் முன்னிலை பெற்றுள் ளார். 9 மாநிலங்களில் வெற்றி பெற்ற இவர் மொத்தமாக 420 பிரதிநிதிகளை நேற்றுமுன் தினம் சேகரித்துக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'சூப்பர் ரியூஸ்டே' வாக்கெடுப்பு முடிவுகளின்படி ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்ரனும் குடியரசுக் கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்னும் போட்டியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சாட்டில் தொடரும் மோதல்களில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் பலி

என்டிஜமேனா, பெப்.07

சாட்டில் அரசுப் படைகளுக்கும் கிளர்ச் சிக்காரர்களுக்கும் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல்களில்100 இற்கும் மேற்பட்ட வர்கள் கொல்லப்பட்டுள்ள அதேவேளை, அரசிற்கு ஆதரவாக இராணுவ நடவடிக் கையை மேற்கொள்ளப் போவதாக பிரான்ஸ் எச்சரித்துள்ளது.

தலைநகரிற்கு வெளியே நிலைகொண் டுள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக விமா னத் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக சாட் அரசு தெரிவித்துள்ளது. எனினும், பிரான்ஸின் மிராஜ், ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்துவதாகக் கிளர்ச்சிக்காரர் களின் தலைவர் மஹமட் நூரி குறிப்பிட்டுள் ளார். பிரான்ஸ் இதனை நிராகரித்துள்ளது.

தலைநகரில் பல உடல்கள் சிதை வடைந்த நிலையில் காணப்படுகின்றன என உள்ளூர் செய்தியாளர்கள் குறிப்பிட் டுள்ளனர். 10 இற்கும் மேற்பட்ட இராணு வம் மற்றும் பொதுமக்களின் உடல்களை யும் எரியுண்ட நிலையில் இராணுவ வாக னங்களையும் கண்டனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, நூற்றுக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று சாட் டின் செஞ்சிலுவை அதிகாரிகள் குறிப்பிட் டுள்ளனர். 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை சாட்டிலுள்ள தனது பணியாளர்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டதாக அதன் செயலாளர் நாயகம் தெரி வித்துள்ளார்.

# போப்பாண்டவரைச் சந்திப்பதற்கு விரும்புகின்றார் பின்லேடன் மகன்



ரோம், பெப்.07

அல்-குவைதா தலைவர் ஓஸாமா பின் லேடனின் புதல்வர் ஓமர் பின்லேடன், போப் பாண்டவரைச் சந்திக்கவும், அத்தற் காக வத்திக்கானுக்கு விஜயம் செய்யவும் ஆவல் தெரிவித்துள்ளார்.

இத்தாலிய தொலைக்காட்சியின் எல்.ஏ.7 என்னும் அலைவரிசைக்குத் தாம் அளித் துள்ள பேட்டியில் ஓமர் பின்லேடன் தனது ஆவலை வெளியிட்டுள்ளார். இப்பேட்டி நேற்றுமுன்தினம் ஒலிபரப்பாகியது.

''சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் 16ஆவது ஆசீர்வாதப்பரைச் சந்திக்க நான் ஆவலாக இருக்கின்றேன். எனினும், அது எளிதான ஒரு காரியமல்ல என எனக்குப் பலர் கூறியுள்ளனர்." - என அவர் தம்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

ஓமர் பின்லேடன், பலத்த பாதுகாப்புக் கும் மத்தியில், தமது மனைவி ஷெய்னா வுடன் சுவிற்ஸர்லாந்திலிருந்து ரோம் வந்த டைந்தார். ஷெய்னா 52 வயதான விவா கரத்துச் செய்து கொண்ட ஒரு பிரிட்டிஷ் பெண்ணாவார். 26 வயதான ஓமர் பின் லேடனை மணந்து கொண்ட பின்னர் இஸ் லாமிய சமயத்தைதத் தழுவியுள்ளார்.

ஓமர் பின்லேடன் இத்தாலி தொலைக் காட்சிக்கு அளித்துள்ள தமது பேட்டியில் 'எனது தந்தையார் (ஓசாமா பின்லேடன்) இறந்துவிட்டார் என நான் நினைக்கவில்லை. அப்படி மரணித்திருந்தால் எனக்குத் தெரிந் திருக்கும்; உலகத்துக்கும் தெரிவித்திருக் கும்.'' - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''செப்டெம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா வில் இடம்பெற்ற தாக்குதலில் பலியான அனைவருக்காகவும் நான் பெரிதும் துயரப் பட்டேன். எனது தந்தையும் ஓர் இரக்கசிந்தை படைத்தவர்தான். அவருக்கு வழிகாட்டி களாக உள்ளவர்கள் மோசமானவர்கள்.'' - என்றும் அதில் சாடியிருந்தார்.

# ஐ.சி.சியின் ஒருநாள் தரவரிசை பந்துவீச்சில் பொலக் முதலிடம்

டுபாய், பெப்.07

ஒருநாள் போட்டிகளுக்கான பந்து வீச்சாளர் தரவரிசையில் தென்னாபிரிக்கா வீரரும் அண்மையில் சர்வதேசப் போட்டி களிலிருந்து ஓய்வுபெற்றவருமான ஷோன் பொலக் 899 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கின்றார்.

தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுக ளுடனான ஒருநாள் தொடர் முடிவடைந் த நிலையில் நேற்றுமுன்தினம் சர்வதேச கிரிக்கெட் சபை கடைசியாக துடுப்பாட் டம், பந்துவீச்சுத் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலிலேயே தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்கின்றார் பொலக். மேற்கிந்தியத் தீவுகளுடனான ஒரு நாள் தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக இவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இதன் மூலம் அவர் கூடுதலாக 14 புள்ளிகளைச் சேர்த்து முதலிடத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளார்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் ரிக்கி பொண்டிங் முதலிடத்தில் இருக்கின் றார். இந்திய வீரரான சச்சின் டெண்டுல்கர் சுமார் 2 வருடங்களின் பின்னர் முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். 726 புள்ளிகளைப் பெற்றுள்ள அவர் 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை யில் முதல் பத்து இடங்களில் உள்ளோர் விவரம் வருமாறு:-

ரிக்கி பொண்டிங் (822 புள்ளிகள்), அன்ட்ரூ சைமண்ஸ் (772), கிரேம்சிமித் (753), மொகமட் யூசுப் (752), கெவின் பீற்றர்ஸன் (748), மத்தியூ ஹைடன் (741), ஹேர்சல் கிப்ஸ் (731), மைக்கல் ஹசே (727), சச்சின் டெண்டுல்கர் (726), சந்தர்போல் (721).

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதல் பத்து இடங்களில் உள்ளோர் விவரம் வருமாறு:-

ஷோன் பொலக் (899 புள்ளிகள்), ஷேன் பொண்ட் (755), டானியல் விக்ரோறி (746), பிரட் லீ (714), நதன் பிரக்கன் (713), முரளிதரன் (712), சமிந்த வாஸ் (701), கைல் மில்ஸ் (694), டரன் பவல் (673), மஹ்ரூப் (661).

# அடுத்த ருவென்ரி/20 உலகக் கிண்ணம் இறுதியாட்டம் லோட்ஸ் மைதானத்தில்

லண்டன், பெப். 07

2009ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 2ஆவது ருவென்ரி/20 உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டம் கிரிக்கெட் உலகின் பிரபலமான லோட்ஸ் மைதானத் தில் நடைபெறும் என்று இங்கிலாந்துக் கிரிக் கெட் சபை அறிவித்துள்ளது.

முதலாவது ருவென்ரி/20 உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவில் கடந்த செப்டெம்பர் மாதம் நடந்தது. இதில் இந்தியா கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்தப் போட்டிக்கு பெரும் அளவுக்கு வர்த்தகம் நடைபெறுவதால் 2 ஆண்டு களுக்கு ஒருமுறை இந்தப் போட்டியை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி 2009ஆம் ஆண்டு 2ஆவது ருவென்ரி/20 உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் நடத்தப்படுகிறது.

இதன் இறுதிப்போட்டி உட்படப் பெரும் பாலான ஆட்டங்களை லோட்ஸ் மைதானத் தில் நடத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய் துள்ளது. இதற்காக ஐசிசியிடம்பரிந்துரை செய்துள்ளது. இதே போல அரையிறுதி மற்றும் சில 'சூப்பர்8' ஆட்டங்களை ஓவல் மைதானத்தில் நடத்த முடிவுசெய்துள்ளது.

2009ஆம் ஆண் டுக்கான ருவென்ரி /20 உலகக் கிண் ணப் போட்டி நடை பெறும் இடங்களை விரைவில் ஐ.சி.சி. அறிவிக்கும் என்று [illegible]

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கதிரித்தம்பி



பிள்ளையார் கோயிலடி, ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கலட்டிலேன், கோண்டாவில் மேற்கு சிவநாதன் இல்லத்தில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை கதிரித்தம்பி நேற்று (06.02.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
தொ.பே. 0214590659

தகவல்:
எஸ்.சந்திரா
(பெறாமகள்)

## "அவன் சென்ற பாதைகளைக் கண்டேன் ஆயினும் அவனைகுணமாக்குவேன்"

நான் என் வாழ்விற்கான அர்த்தத்தை தேடுகின்றேன் அல்லவா? இறைவன் எனக்குள் தன் உயிர் மூச்சை ஊதித்தந்த என் வாழ்வு நிலைபெற இறைவன் தரும் நெறி என்னவெனில்.

1) என்னை நான் மறக்க வேண்டும்.
2) அன்றாடம் என் வாழ்வின் சிலு வையை சுமக்கவேண்டும்.
3) ஆண்டவர் இயேசுவைப் பின் தொடர வேண்டும்.

தன்னை மறப்பது என்பது எம் கிறீஸ் தவ ஆன்மீகத்தில் இறைவனின் திட்டத் திற்காய் என்பதை அர்ப்பணிப்பது அல் லது கீழ்ப்படிவது. மரியாள் ஆண்டவரின் தாய் ஆக அழைப்பு. சிமியோன் (நா ணல்) பாறையாக அழைப்பு. சவுல் பவு லாக அழைப்பு. மேற்குறிப்பிட்ட இவர்க ளின் கீழ்ப்படிவு தன்னல மறுப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு.

சிலுவையை சுமப்பது ஓர் முனையில் இருந்து இன்னொரு முனை நோக்கிய என் பயணத்திலே, நான் என் மேலோட் டமான வாழ்வின் பிடிகளிற்குள் மடிந்து, உயரிய என் (இறைவனும் + நானும்) வாழ்வின் குறிக்கோளிற்காய் வாழுதல்.

இயேசு ஆண்டவரை பின் தொடர் வது என்பது சிலுவையை சுமக்க தொ டங்கி விட்டேன்! போதாது!! அன்றாடம் என்னுள் பாஸ்காவை (மரணம் உயிர்ப்பு), (பாவம் அருள்வாழ்வு) கொண்டாடி, கொண்டாடி நான் வாழவே ண்டும். துன்பம், சோதனை, சவால்கள் என் உள் இரந்தும் வரலாம், புறத்திலும் இருந்தும் வரலாம் சோர்வடையாது, பின் வாங்காது திருத்தாது பேதுருவின் அனு பவத்தை முன் நிறுத்திப்பயணிக்க வேண்டும்.

''இறந்த இயேசுவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச்செய்தார். அவ்வாயே நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி, திருமுழுக்கின் வழியாக அவரோடு அடக் கம் செய்யப்பட்டுள்ளோம்.''

(உரே.6:4)

தூய சிப்பிரியான் பற்றி வேதசாட்சிக




ளின் பணிகள் என்ற பதிவேடு இவ்வாறு இயம்புகிறது. நீதிபதிமுன் நிறுத்தப்பட்ட சிப்பிரியானிடம்....

நீதிபதி : ''நீர்தான் தார்சீசியசை சேர்ந்த சிப்பிரியானா?''
சிப்பிரியான் : ''நானே''
நீதிபதி : ''எமது அதிமேன்மைமிகு பேரரசர் நீர் பலியிடப்பட ஆணைபிறப்பித்துள் ளார்.''
சிப்பிரியான் : ''நான் இணங்குகின்றேன்''
நீதிபதி : ''மறுபரிசீலனை செய்யும்''
சிப்பிரியான் : ''இவ்விதமான ஓர்வாக் கில் எந்தவிதமான விளக் கத்திற்கும்இடம் இல்லை.''
நீதிபதி : ''தார்சீசியசை சேர்ந்த சிப் பிரியான் வாளால் வெட் டிக்கொல்லப்பட வேண் டும் என தீர்ப்பளிக்கின் றேன்.''
சிப்பிரியான்: ''இறைவா உமக்கே நன்றி.''

✱ என்வாழ்வில் அர்த்தத்தை இறைவ னில் இணைந்து நான் தேடுகின்றேனா?
✱ இறை அனுபவத்தில் நான் மென்மே லும் ஆழம்காண என்ன செய்யப் போகின் றேன்?

- ''யேசுதாசன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப் பலப் பரீட்சை இறுதியில் முட்டுக்கட்டையிலேயே முடியும்?

கொழும்பு, பெப்.07

விடுதலைப் புலிகளிடமிருந்து வட பகுதியை இவ்வருட இறுதிக்குள் முற்றாக விடுவித்து கைப்பற்றிவிடுவோமென இலங்கையின் அரசியல் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள போதிலும், கள யதார்த்தங்கள் இதற்கேற்றால் போல அமைந்திருக்கவில்லையென தெரிவிக்கும் இராணுவ ஆய்வாளர்கள், இரு தரப்புகளில் ஒன்று வெற்றி பெறுவதற்குப் பதிலாகஇந்தப் படைப்பலப் பரீட்சை இறுதியில் இராணுவ முட்டுக்கட்டை நிலையையே எட்டலாம் என எதிர்வு கூறியுள்ளனர்.

'இராணுவ முட்டுக்கட்டையை நோக்கி இலங்கை நகருகின்றதோ...!' - என்ற தலைப்பில் இந்தோ - ஆசிய செய்தி நிறுவனம் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் பயங்கரவாதப் பிரச்சினையை தமக்குப் பின்னர் புதிய இராணுவ தளபதி ஒருவருக்கும் தாம் விட்டுச் செல்ல மாட்டார் என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுதலைப் புலிகளின் தலைவரைத் தாங்கள் கொல்லப் போகின்றனர் எனச் சபதம் செய்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கோட்டைகள் மிக வேகமாக வீழ்கின்றன எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒன்றரை மாவட்டங்களே புலிகளின் கையில் எஞ்சி உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கு கைப்பற்றப்பட்டமையும், அவர்களது பல கப்பல்கள் அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க சாதனைகளே. தென் பகுதியில் மக்களின் மனோநிலையை உயர்த்த இவை உதவின.

எனினும் 2007 நடுப்பகுதிக்கு பின்னர் இலங்கை இராணுவத்தால் குறிப்பிடத்தக்க வெற்றி எதனையும் பெற முடியவில்லை. இதன் காரணமாக நீண்டகால முட்டுக்கட்டை நிலை உருவாகலாம் என்ற அச்சம் இராணுவ ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இது கடைசியில் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியையும் உருவாக்கலாம்.

மன்னாரில் இராணுவ நடவடிக்கைகள் செப்டெம்பர் 23 இல் ஆரம்பமாகின. 16 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள விடத்தல் தீவை கைப்பற்றுவதே இதன் நோக்கம். எனினும் நான்கு மாத மோதலின் பின்னர் எட்டு கிலோ மீற்றரே கைப்பற்றப்பட்டுள்ளது. இது குறிப்பிட்ட பிரதேசத்தின் மிகக் குறைந்தளவு பகுதியேயென இராணுவ நிபுணர் ஒருவர் இந்தோ - ஆசிய செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மன்னார் முதல் வெலிஓயா, நாகர் கோவில் போன்ற இடங்கள் வரை நீளும் பாரிய பிரதேசத்தில் இராணுவத்தினர் முடக்கப்பட்டுள்ளனர்.

**படையினர் கடும் எதிர்ப்பைச் சந்திக்கின்றனர்**

விடுதலைப் புலிகளின் முதலாவது, இரண்டாவது பாதுகாப்பு நிலைகளை தகர்த்து முன்னேறுவதற்குப் படையினர் முயல்கின்றனர். சிறந்த படைப் பிரிவுகளும், ஆயுதங்களும் இதற்கமைய பயன்படுத்தப்படுகின்றன. எனினும் படையினர் கடும் எதிர்ப்பைச் சந்திக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு தரப்பிலும் உயிரிழப்புகள் அதிகமாகவுள்ளன. விடுதலைப் புலிகள் அதிகளவில் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இதனால் அவர்களது மனவுறுதி பாதிக்கப்படவில்லை என இராணுவ நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் ஐம்பதாயிரம் படையினர் நிலைகொண்டுள்ள போதிலும் இவர்கள் ஆனையிறவை கைப்பற்றி, வன்னி மீதான புலிகளின் பிடியை நெருக்குதலுக்கு உள்ளாக்குவதற்கு பயன்படுத்தப்படவில்லை.

**விடுதலைப் புலிகள் வெலி ஓயாவில் தாக்குதல்**

விடுதலைப் புலிகள் தம் மீதான அழுத்தத்தை குறைப்பதற்கும் அரச படையினரின் கவனத்தைத் திசை திரும்புவதற்கும் வெலிஓயாவில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். பலாலி தளத்தின் மீது ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனைவிட முக்கியமாக கொழும்பு உட்பட இலங்கையின் சகல பகுதிகளிலும் புலிகள் சிறு தாக்குல்களை மேற்கொள்கின்றனர்.

கெப்பிற்றக்கொலாவை முதல் மணலாறு (வெலி ஓயா) வரையிலும், புத்தள முதல் யால வரையிலும், கொழும்பு முதல் கஞ்சிக்குடிச்சாறு வரையிலும் அவர்கள் கிளைமோர் மற்றும் தற்கொலைக் குண்டு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

கிழக்கிலிருந்த விடுதலைப் புலிகள் விரட்டப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் திங்கட்கிழமை அம்பாறையின் பக்மிட்டிய இராணுவ முகாமை அவர்கள் சிறிது நேரம் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்திருக்கின்றனர்.

வட பகுதியை இவ்வருட இறுதிக்குள் கைப்பற்றும் திட்டம் காரணமாக ஆயிரக்கணக்கான படையினர் வடக்கில் முடக்கப்பட்டுள்ள அதேவேளை, தென் பகுதியிலும் அதிகளவு படையினருக்கான தேவை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள ஐம்பதினாயிரம் படையினருக்கு மேலதிகமாக கிழக்கில் புதிதாக கைப்பற்றிய இரண்டாயிரம் சதுர கிலோமீற்றர் பிரதேசத்தைப் பாதுகாக்க ஒரு லட்சம் படையினரும், யாலாவிற்கு நாலாயிரம் பேரும் தேவையென சுட்டிக் காட்டியுள்ள முன்னாள் விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக, கொழும்பிற்கும் ஒரு லட்சம் படையினர் தேவையென்பதை கருத்தில் கொள்ளும் போது ஒட்டு மொத்தமாக இரண்டரை லட்சம் படையினராவது தேவைப்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2007 இற்கான பாதுகாப்பு செலவினம் 13 ஆயிரத்து 900 கோடி ரூபா என தெரிவிக்கப்பட்டது. எனினும் உண்மையான செலவினம் இதனை விட 20 வீதம் அதிகமாக இருக்கும். இவ்வருடம் இது 16 ஆயிரத்து 600 கோடி ரூபாயைத் தாண்டலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பல மேற்குலக நாடுகள் இலங்கைக்கான நிதியுதவிகளை நிறுத்தியுள்ள சூழ்நிலையிலேயே இது நடைபெறுவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## கனடாவில் தீ விபத்து ஈழத்தமிழர் இருவர் பலி

கனடா மொன்றியலில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை கார்த்திகேயன் (வயது-57), அவரது மனைவியான கா.சரோஜினி (வயது- 51) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த சமயம் வீடு திடீரென தீப்பற்றி எரிந்தபோது இவர்கள் இருவரும் தீயில் சிக்கி உயிரிழந்தனர் என்று கூறப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மொன்றியல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## நாகர்கோவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழைய நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இந்த மோதல்களில் 12 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததுடன் மற்றும் பலர் காயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் 30 பதுங்கு குழிகள் முற்றாகத் தகர்க்கப்பட்டன என்றும் தமது தரப்பில் ஐந்துபேர் காயமடைந்துள்ளனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகளால் விட்டுச்சென்ற இயந்திரத் துப்பாக்கி ஒன்றையும், ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் மற்றும் ஐந்து மகஸின்களையும் இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என்று படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## மட்டு தேர்தலுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவை வருமாறு:-

மட்டக்களப்புத் தேர்தல் நேர்மையான முறையில் இடம்பெற வாய்ப்பில்லை. அங்கு இப்போதே வன்முறை நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை முதல் இன்றுவரை 28 பேர் கடத்தப்பட்டுள்ளனர். அவர்களுள் 12 பேர் வேட்பாளர்கள். அங்கு ஜனநாயக சூழல் இல்லையென்று தெரிவிக்கப்படுகின்றபோதிலும் அரசு தேர்தலை அங்கு நடத்துவதில் தீவிரமாக உள்ளது. - என்றார் அவர். (07)

## இலங்கைக்கு ஆயுத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆர்ப்பாட்டத்தில் 700 க்கும் மேற்பட்ட பெரியார் திராவிடர் கழகத்தினரும் புதுடில்லி வாழ் தமிழர்களும் பங்கேற்று, கண்டன முழக்கங்களை தமிழ் - ஆங்கிலம் - ஹிந்தி ஆகிய மும்மொழிகளிலும் எழுப்பினர்.

பேரணி நடைபெற்ற பகுதியெங்கும் இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்கள் மீதான இலங்கை அரசினது இனப்படுகொலைகளைச் சித்திரிக்கும் புகைப்படங்கள், பதாகைகளாக தொங்க விடப்பட்டிருந்தன.

'இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்து!', 'இனப்படுகொலைக்குத் துணை போகாதே!', 'ஆயுத உதவி வழங்காதே!' என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தும் பதாகைகளை தமிழ் - ஆங்கிலம் - ஹிந்தி ஆகிய மும்மொழிகளிலும் ஆர்ப்பாட்டத்திலே பங்கேற்றோர் ஏந்தியிருந்தனர்.

இலங்கை அரசின் இனப்படுகொலையைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் வகையில் குழந்தைகள், பெண்கள் ஆகியோர் காயக் கட்டுகளுடன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றமை கவன ஈர்ப்பாக அமைந்தது.

பெருந்திரளாக அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகத்தினரும் இந்த ஆர்ப்பாட்டத்தைப் பதிவு செய்தனர்.

இலங்கைக்கு ஆயுத உதவிகளை இந்திய அரசு வழங்கக் கூடாது என்று தெரிவித்து தமிழ்நாட்டு மக்கள் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ள படிவங்களை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியிடம் பெரியார் திராவிடர் கழகத்தினர் நேற்று மாலை 4 மணியளவில் நேரில் கையளிக்க இருந்தனர். (உ)

## வடக்கையும் கிழக்கையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச்சட்டம்தான் ஆட்சிசெய்து வருகின்றது. இந்தச் சட்டம் வெளிநாடுகளில் வெறுக்கப்படுகின்றது.

இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களும் தனித்தனி சமூக அடையாளங்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் நிச்சயமாக இன்று ஒற்றுமையாக இல்லை.

இலங்கை அரசமைப்பு அவர்களை சமூகரீதியாக, இனரீதியாக, கலாசார ரீதியாகப் பிரித்து வைத்திருப்பதே இதற்குக் காரணம்.

இதனால் உண்டான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு ஒற்றையாட்சி முறைமைக்குள் கட்டுண்டு கிடக்காமல் நடைமுறைச் சாத்தியமான தீர்வை முன்வைப்பதே புத்திசாலித்தனமாகும்.

**சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சிப்படுத்த முன்வைக்கப்பட்டது**

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுயோசனை சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சிப்படுத்தவேயன்றி வேறு எதற்காகவுமில்லை.

அதில் ஜனாதிபதி தனது யோசனையைத் திணித்து, 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கோரும் விடயத்தை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மூலம் முன்வைக்கச் செய்துள்ளார்.

இந்த விடயத்தில் இணைத்தலைமை நாடுகள் உரிய கவனத்தைச் செலுத்தவில்லை. எந்தவிதத் தலையீட்டையும் அதில் அவை மேற்கொள்ளவில்லை.

13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைச் சாத்தியமானது என்று ஜனாதிபதி 60ஆவது சுதந்திரதின விழாவில் கூறினார்.

> இரண்டு உரைகளுக்கும் இடையில் பெரும் முரண்பாடு
>
> சர்வகட்சிக் குழு அங்குரார்ப்பண வைபவத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரைக்கும் சுதந்திரதினத்தன்று ஆற்றிய உரைக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுகின்றன.

ஜனாதிபதி தனது நண்பர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆனந்தசங்கரி ஆகியோர் இவ்விடயம் தொடர்பாகக் கூறிய கருத்துக்களையும் கூடப் புறக்கணித்துவிட்டார்.

வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையில், அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது; பயன் தராது. இது பெரும் அநியாயமாகும். 13 ஆவது திருத்தச்சட்டம் வடக்கு - கிழக்கு இணைப்பையே வலியுறுத்துகின்றது.

**அரசு தன்னைத்தானே முட்டாளாக்குகிறது**

இந்த அடிப்படையிலான தீர்வு முயற்சி மூலம் அரசு தன்னைத் தானேயும் அத்துடன் மக்களையும் ஏமாற்றிக்கொள்கின்றது. இத்தீர்வு முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது. இந்த அதிகாரப்பரவலாக்கலில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் கூட சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இந்தத் தீர்வு மூலம் அரசு தன்னைத் தானேதான் முட்டாளாக்குகிறது. தமிழர்களை அல்ல. தமிழர்கள் இது விடயத்தில் மிகவும் தெளிவாக உள்ளனர்.

சிங்கள மக்கள் தமிழருக்கு நீதியான தீர்வை வழங்கத் தயாராகவேண்டும். ஐ.தே.கட்சியும், ஸ்ரீல.சு.கட்சியும் ஒன்றிணைந்து முரண்பாடில்லாத ஒரு தீர்வை முன்வைத்தால்தான் அது பொருத்தமானதாக இருக்கும். வெற்றியும் அளிக்கும்.

அரசு இவ்வாறான குறும்புத்தனமான வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, தற்போது முன்வைத்திருக்கும் தீர்வு யோசனையைத் தூக்கி வீசிவிட்டு, நல்லதொரு பொருத்தமான தீர்வைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் - என்றார். (அ-உ)


**அன்பான A/L கலை, வர்த்தக மாணவர்களுக்கு**

DMI தனது கிளை நிறுவனம் என்ற குழந்தையை பல தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி உங்களுக்காக உங்கள் கைகளில் சனி காலை 8 மணிக்கு ஒப்படைக்கப் போகிறது. அக்குழந்தையை சீராட்டித் தாலாட்டி வளர்ப்பது உங்கள் கைகளிலேயே உள்ளது.

DMI இன் கிளை நிறுவனத்திற்கு பஸ்ஸில் வருவோர் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றுவது சிறந்ததாக அமையும் :

1. பருத்தித்துறை வீதியால் வருவோர் DMI இற்கு முன்பே இறங்கமுடியும்.
2. K.K.S வீதி, மூளாய் வீதியால் வருவோர் நாவலர் வீதி கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இறங்கி கிழக்கால் 50m நடந்தால் DMI இனை அடையலாம்.
3. A9 வீதியால் வருவோர் பிரதான பஸ் தரிப்பிடத்தில் இறங்கி பருத்தித்துறை வீதியால் செல்லும் எந்த பஸ்சை எடுத்தாலும் DMI இற்கு முன்பே இறங்க முடியும்.

கிளை நிறுவனம் DMI

154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி), யாழ்ப்பாணம்.

PAPER CLASS
தமிழ்
திரு. குழந்தை
ஆரம்பம் 7.2.2008 வியாழன் 3 pm
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

PAPER CLASS
பொருளியல்
திரு. சுபாகரன்
ஆரம்பம் 8.2.2008 வெள்ளி 4pm
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி,யாழ்.
தமிழ்
திரு. குழந்தை
A/L 2008-10-00 am
A/L 2009-8-00 am
A/L 2010-9-00 am
DAY CLASS
mon to fri 8.30
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
மீண்டும் ஒரு புதிய பிரிவு
A/L Day Class
பொருளியல்
P.S.குமார்
ஆரம்பம் : 08.02.2008
வெள்ளி 9.30 a.m.
எக்காரணம் கொண்டும் பிரிவு I இல் அனுமதி இல்லை
பொருளியல் கல்லூரி
யாழ்ப்பாணம்

விக்னா கல்வி நிறுவனம்
கிளை நிறுவனம். 417, K.K.S Road, யாழ்(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)
தரம் 6 தொடக்கம் O/L வரை பிரிவு I இக்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டு அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பிரிவு 2 ஆரம்பம் 10.2.2008 மாலை 3 மணி
பிரிவு I
O/L DAY CLASS ஆரம்பமாகவுள்ளதால் அனுமதிகளை தலைமையகத்திலும் (52. ஸ்ரான்லி வீதி யாழ்) பெற்றுக்கொள்ளலாம்.
விஞ்ஞானம் திரு N.தேவா
கணிதம் திரு. விக்கி, திரு. ரூபன்
மற்றும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாமின் ஒருங்கிணைந்த சேவை.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org